# BRILLIANCE

இதழ்: 12
VOLUME: 4
ISSUE: 12
DEC. - 2009







கைலாய
யாத்திரையில்
ஸ்வாமிகளுடன்

# ஒளி மயம்

ONTARIO GOVERNMENT APPROVED NON-PROFIT CORPORATION # 1707010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Editorial December 2009

Hari Om!

My greetings and blessings after five months due to the Kailsh Yatra or pilgrimage with some students. All of us enjoyed the blessings of the Almighty and evinced the grace of Him at every turn of our pursuit. The vedantic teachings well churned the students in the path of self-realisation. Remember, we are called overcomers. That means we're going to have obstacles to overcome. You can't have great victories without having difficult battles. You'll never have a great testimony without going through a few tests.

If you have had unfair things happen to you, or people have robbed or cheated you, the Veda says that Brahmam will bring you out with twice what you had before. If you are struggling through tough times, start declaring 'I' am coming out of this experience with twice the joy, twice the peace, twice the honor, twice the promotion. Everyday when you get up, declare, "This is going to be a day of victory in my life. I am expecting Almighty's unprecedented favor and promotion. They're all on the way due to His Grace"

I've had people tell me that "I know that someday I'll be happy. I know one day I'll enjoy my life in the sweet by and by". I appreciate what they are saying, but Brahmam wants us to enjoy our lives right here in the nasty now and now. He wants us to have little heaven and on earth right where we are by tapping the Almighty inside of you. If you don't appreciate and take advantage of your freedom, if you don't get your thoughts, your words, your attitudes going in the right direction, it won't do any good.

You may be sitting back waiting after doing Poojah or Bhajan on Almighty to do something supernatural in your life, but the truth is Almighty is waiting on you. You must rise up in your authoirty, have a little backbone and determination, and say "I am not going to live my life in mediocrity bound by addictions, negative and defeated. I am going to take hold of everything God has in store for me".

There is nothing in your life that you cannot overcome. No hurt is too deep that you cannot forgive. You have the power to let go of the negative things of your past. You may have been knocked down a hundred times, but you have the power to get back up again. The medical report may not look good, but

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

you have the power to stand strong. Too many people learn to function in their dysfunction. They embrace all kinds of things that are not Almighty's best. They are argumentative, bitter and resentful; they allow strife in their home, and they're critical and judgemental. Instead of dealing with it and being willing to change, they merely put a bandage on it and continue living in bondage, functioning in their dysfunction. You are learning to function in your dysfunction. I encourage you to go one step further. Forgive one person who has offended you. Strive to be just a little more disciplined today than you were yesterday.

Don't ever say, "I will never see my dreams come to pass; I'll probably never get married, or my bills are so high, and my income is so low, I don't think I'll ever get out of debt" No, turn that around. You need to be saying, "I am more than a conqueror. I will fulfill my destiny. God is supplying all of my needs".

Back again Discourses will start again to facilitate to reach yourself to your destiny.

May Almighty bless you all! With Blessings & Love!

Swami Paramatmananda.

## Who are Hindus?

The question has assumed importance because there is no fixed definition for the word Hindu like Christian or Muslim and each one have given different definition of who can be called a Hindu. A Christian is a follower of Christ worshiping a particular God; so is the case with Muslim. A Muslim is a follower of Prophet Muhammad and a particular God called by them as Allah. Their religions are called Christianity and Islam respectively. But that is not the case with Hindus even though their religion is called Hinduism. The word Hindu has come from Persians who used to call the river Sindhu and the inhabitants around it, as Hindu irrespective of their faith and the deity they followed or worshiped. And as per that definition had there been any other religion at that time in India, the followers of those religions also would have been Hindus. The question therefore arises is whether Hinduism can be called one religion or an amalgam of religions? And in order to find out an answer we will have to find out what do we mean by religion?

Should we take the meaning of religion in the narrow sense given in dictionaries as the service and worship of God or the supernatural or in a broader sense as

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

understood by Hindus as Dharma or duties which as human beings are natural and one has to perform irrespective of the God one worships? If we take religion in a broader sense as Dharma, then there cannot be different Dharma or religions for different individuals even though his faith and the deity or God he worships may be different. And in that case Hinduism or Sanatana Dharma will be the only universal religion for the whole of humanity or human beings of the universe or world as it only allows each individual to have different faiths and to worship different Gods or Gods in different forms or not to worship at all. And other religions though they call themselves as religions like Christianity or Islam cannot be termed as religions but only as faiths, as their so-called religion is restricted to only those who follow and believe their principles and beliefs. On the other hand, if religion means what is defined in the dictionaries in the narrow sense, then Hinduism will be an amalgam of religions.

In any case before embarking to find out who is a Hindu, let us find out the purpose of religion. Religions came into existence to get protection and elimination of fear, initially the fear of natural furry and to give us happiness. Human beings created entities of God to give us protection from natural calamities and extended it to other fears. Our seers however dived deep inside the mind to find out the real cause of fear as also of happiness, whether happiness depends on external things. They found out that fear is only a play of mind and mind itself is nothing but a bundle of thoughts; that happiness does not depend on external things even though we feel that we get happy on acquisition of a thing we were longing for. And that our nature itself is happiness, our natural form or swarup is Sat-Chit-Anand, which, for becoming happy, we must realize. Sanatana Dharma is a means for realizing our real swarup. When our seers discovered the truth of mind and of happiness, like any scientific discovery it was meant for the whole of humanity, to the whole world, not only to the inhabitants of a particular region or to particular race or persons. So also they found that ways to realize the self are many and each one can adopt the way, which is most suited to him.

Having seen the purpose of religion, let us now consider who is a Hindu. Since as per our seers the purpose or goal of life is to realize the self, which eliminates the fear as, also gives the happiness, a Hindu is one who accepts the principle that the ultimate goal of life is to realize the self and who believes that to achieve the goal there are variety in

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the means and indefiniteness in the objects of worship. Since Hinduism accepts variety in the means or ways to realize the self we cannot have any other criteria or condition for being a Hindu unlike the Christianity or Islam, which insists that their way is the only way. So also Hinduism accepts the indefiniteness of the objects of worship or even one may not worship at all unlike Christianity or Islam, which insists that their God is the only real God and as such we cannot prescribe any rituals for joining Hinduism Sanatana Dharma or Hinduism believes that our real form or Swarup is Sat-Chit-Anand which every one should realize. And in that sense what Lisa Miller has asserted when she said that "We are all Hindus now is correct". The Dharma of all human beings is the same. In fact Christianity and Islam and all other religions, which are created, are artificial barriers created which divides the human society of the world unnaturally. And that is why Yogi Aurobindo says that Sanatana Dharma, the universal religion, can save the world.

An unnecessary controversy has been raised whether Sanatana Dharma or Hinduism is a way of life or religion. In fact if we study the Sanatana Dharma we will find that it is a way of life in a broader sense, which includes the religion. Sanatana Dharma was formed for achieving the goal of life through living in a society and state and as such has prescribed the rules and formed social orders or Ashrams for the individuals and the society to carry out for its smooth working.

=swami=

## Supreme Reality in Vedas

A number of hymns in the Vedas describe God in details. A few hymns can be mentioned for proper understanding of Nirguna Brahma who is the Universal God. Rig Veda 6-15-13 and 14 mentions that He is a pure illuminator, unifier and remover of all miseries, commands all to observe non-violence and other rules of righteousness, which are a-priori principles beyond any sense experience.

Rig-Veda 6-47-18 says that for each form, He is the Model. It is His Forms that are to be seen everywhere, in spiritual and material things. He exists in all animate and inanimate life/things but He is manifest in the human beings where He dwells in their hearts (Sama Veda 860). A similar description that He dwells in the human hearts is also there in Bhagavad-Gita, Srimad Bahgavatam and many other scriptures.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Rig Veda 1-9-5, 6 mentions, "He is the Lord of knowledge, infinite wisdom and material wealth". He pervades the matter and the whole space (A.V.19-20-2). All the four Vedas describe that He and His laws (Rta) are the same. Those who follow His laws and commandments can realize Him in one birth. He is unborn (ajo) and incarnation of God as a human being is not visualized (Y.V.34-53, 40-8 and A.V. 10-23-4). He lives within you and you live within Him as one of His tiny living cells. .

The Vedic metaphysics contained in Upanishads tell us that He has no demand for material offerings, donations, blind, proxy and ostentatious worship but wants all the human beings to follow His laws (Rta) of social, moral and physical order and assist him in the maintenance of His Grand wondrous Design. Vedas tell us that all evils, corruption, bribery, naked selfishness and material desires are more rampant with people who do not follow His laws (Rta). Majority of such persons even create pollution of all kinds, environmental hazards, social and economic tensions in society and thus knowingly or unwittingly go against His laws and tend to create social, moral and physical disorder.

Vedas advise open discussions on religion, ethics, morality, divinity, soul, spirit and Prakrti in an assembly where all individuals are advised to participate. This august body in the Vedas is described as Vidhta. Being ineffable, He does not want the human beings to praise Him all the time about His attributes. As Sankracharya said, 'even the words recoil to describe Him'. Categories, quantity, quality, colour and words cannot explain Him. Thus Vedas give great importance that we should know and understand Him.

He is an impersonal God, impartial and Unmoved Mover but moves the universe in a wondrous design. There are a number of hymns relating to Rta-laws of God, which He observes and follows Himself sternly. He never breaks them and this result in equilibrium in the entire universe. There is a mention that even animals, birds, plants as well as all inanimate things follow these laws. The more you understand and love Him, the more you go away from ostentatious, blind and proxy worship of gods. The inert matter starts disappearing and you start realising that all human beings are spiritual brothers and sisters. Vedic God has only blessings and mercy for all His creation and no curse for His creatures. If an individual is leading a miserable life of

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

stress, it is his/her own creation as the individuals are their own greatest friends and their own enemies.

Revival of Vedas will strengthen Hinduism. It will facilitate Hindus to explain Sanatana Dharma logically without bringing in mythology and also scientifically to our young children who are getting influenced by Western materialistic thoughts. Hindu children while filling application form/giving their bio-data write "Religion" as Atheism/Humanism.

If Hindu children write so in India, I am sure similar problem exists with Hindu parents abroad. Earlier we revive Vedas we strengthen Hindu religion/Dharma and avoid Hinduism (Sanatana Dharma - the eternal religion) from further shrinkage when two fast long distance runners i.e. Islam and Christianity are competing with each other to convert followers of other religions simply with the sole aim of seeking world domination against the teachings of their own scriptures.

Vedas are relevant today more than in the past. As Vedas (directly revealed by God hence Shruti- also confirmed by Guru Nanak Dev Ji in Adi Grantha "OMKAR VED NIRMAYI"- God revealed Vedas ) contain Ocean of harmonized divine, spiritual and material knowledge their revival can even make scriptures of many other religions/sects/ gurudom/cults as Redundant.

**PRANAYAM: Breathe In – Breathe Out**

Every day, we all have so many things to remember. But there's only one thing really worth remembering – to breathe. Just imagine what would happen if we didn't. Actually, most of the time, we don't. We breathe by habit, incorrectly. Concentration on the breath is the fastest, most time-economic way to become relaxed. Follow the breath on its journey through the folds and turns of the inner body. Feel the indulgent comfort as you inhale. Feel the peace of release as you exhale. Inhale peace, harmony, love, compassion, and joy. Exhale fear, anger, negativity, hatred and sorrow. Think of the breath as a wave on the ocean. As the waves roll in they bring you peace and as they roll out, they take all of your problems with them. Prana is the vital life force or energy that flows through our physical body. Learning to breathe properly through various exercises is called Pranayama. This ancient practice is considered the link between our physical and astral (or spiritual) body. When we remain conscious of our breathing patterns, we are able to maintain a balance. A natural

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

calm falls over us. As has been said, "When the breath is calm, the mind is still".

Sitting or lying in a position that's natural and comfortable to you, place your hand lightly over your abdomen. Inhale slowly and deeply. Follow with your minds' eye the flow of air and pull it deeply down into the base of the spine. Notice your abdomen slightly filling and puffing out. Allow the pure oxygen to saturate your internal self. As you retain the Prana, imagine every cell in the bloodstream filling with cleansing, healing oxygen and each muscle relaxing as they are drenched with air. Then slowly release the breath, exhaling completely until every drop of air has left the body. Pause for a moment, experiencing the sensation of being truly "breathless". Notice your abdomen is now empty and slightly concave.

Practice Pranayama often; before, during and after meditation and Hatha yoga sessions. Witness your breathing pattern when you are frightened or nervous. Notice that you are probably taking quick, short, and shallow breaths, which of course diminish the oxygen flowing to your brain, further worsening the situation. By concentrating, even if just for a moment, we can bring our awareness back to our inner self and the breath will quiet. In addition to the benefit of clearing our mind in times of trouble, every organ also receives the proper internal massage.

There are seven chakras or energy centers in the body, located along the spine. They dwell at the base of the spine; the genital area; the navel or solar plexus; the heart center; the base of the throat; the third eye; and the highest at the crown of the head, represented by 1,000 lotus petals. As we become more adept at Pranayama, we try to visualize the vibrations emanating from each chakra, meditating completely on each one.

The breath is essential to the practice of Hatha yoga. As a rule of thumb, we always use the breath to move in and out of a posture and often retain the breath inside (or outside) of the body during retention of the pose. Any backward bending movement should be done while inhaling. Any forward bending movement should be done during exhalation.The essence of life is breath. Without it, we are known as a corpse. Learn it, practice it, use it, and love it.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Chat With a Heart Speacialist:

A chat with Dr. Devi Shetty, Narayana Hrudayalaya (Heart Specialist) Bangalore

The transcript of the chat is given below. Useful for everyone.

Qn: What are the thumb rules for a layman to take care of his heart?
Ans:
1. Diet - Less of carbohydrate, more of protein, less oil
2. Exercise - Half an hour's walk, at least five days a week; avoid lifts and avoid sitting for a longtime
3. Quit smoking
4. Control weight
5. Control blood pressure and sugar

Qn: Is eating non-veg food (fish) good for the heart?
Ans: No

Qn: It's still a grave shock to hear that some apparently healthy person gets a cardiac arrest. How do we understand it in perspective?
Ans: This is called silent attack; that is why we recommend everyone past the age of 30 to undergo routine health checkups.

Qn: Are heart diseases hereditary?
Ans: Yes

Qn: What are the ways in which the heart is stressed? What practices do you suggest to de-stress?
Ans: Change your attitude towards life. Do not look for perfection in everything in life.

Qn: Is walking better than jogging or is more intensive exercise required to keep a healthy heart?
Ans: Walking is better than jogging since jogging leads to early fatigue and injury to joints

Qn: You have done so much for the poor and needy. What has inspired you to do so?
Ans: Mother Theresa, who was my patient

Qn: Can people with low blood pressure suffer heart diseases?
Ans: Extremely rare

Qn: Does cholesterol accumulates right from an early age (I'm currently only 22) or do you have to worry about it only after you are above 30 years of age?
Ans: Cholesterol accumulates from childhood.

Qn: How do irregular eating habits affect the heart?
Ans: You tend to eat junk food when the habits are irregular and your body's enzyme release for digestion gets confused.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Qn: How can I control cholesterol content without using medicines?
Ans: Control diet, walk and eat walnut.

Qn: Can yoga prevent heart ailments?
Ans: Yoga helps.

Qn: Which is the best and worst food for the heart?
Ans: Fruits and vegetables are the best and the worst is oil.

Qn: Which oil is better - groundnut, sunflower, olive?
Ans: All oils are bad.

Qn: What is the routine checkup one should go through? Is there any specific test?
Ans: Routine blood test to ensure sugar, cholesterol is ok. Check BP, Treadmill test after an echo.

Qn: What are the first aid steps to be taken on a heart attack?
Ans: Help the person into a sleeping position, place an aspirin tablet under the tongue with a sorbitrate tablet if available, and rush him to a coronary care unit since the maximum casualty takes place within the first hour.

Qn: How do you differentiate between pain caused by a heart attack and that caused due to gastric trouble?
Ans: Extremely difficult without ECG.

Qn: What is the main cause of a steep increase in heart problems amongst youngsters? I see people of about 30-40 yrs of age having heart attacks and serious heart problems.
Ans: Increased awareness has increased incidents. Also, sedentary lifestyles, smoking, junk food, lack of exercise in a country where people are genetically three times more vulnerable for heart attacks than Europeans and Americans.

Qn: Is it possible for a person to have BP outside the normal range of 120/80 and yet be perfectly healthy?
Ans: Yes.

Qn: Marriages within close relatives can lead to heart problems for the child. Is it true?
Ans: Yes, co-sanguinity leads to congenital abnormalities and you may not have a software engineer as a child

Qn: Many of us have an irregular daily routine and many a times we have to stay late nights in office. Does this affect our heart? What precautions would you recommend?
Ans: When you are young, nature protects

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

you against all these irregularities. However, as you grow older, respect the biological clock.

Qn: Will taking anti-hypertensive drugs cause some other complications (short / long term)?
Ans: Yes, most drugs have some side effects. However, modern anti-hypertensive drugs are extremely safe.

Qn: Will consuming more coffee/tea lead to heart attacks?
Ans: No.

Qn: Are asthma patients more prone to heart disease?
Ans: No.

Qn: How would you define junk food?
Ans: Fried food like Kentucky, McDonalds, samosas, and even masala dosas.

Qn: Does consuming bananas help reduce hypertension?
Ans: No.

Qn: Can a person help himself during a heart attack (Because we see a lot of forwarded emails on this)?
Ans: Yes. Lie down comfortably and put an aspirin tablet of any description under the tongue and ask someone to take you to the nearest coronary care unit without any delay and do not wait for the ambulance since most of the time, the ambulance does not turn up.

Qn: Do, in any way, low white blood cells and low hemoglobin count lead to heart problems?
Ans: No. But it is ideal to have normal hemoglobin level to increase your exercise capacity.

Qn: Sometimes, due to the hectic schedule we are not able to exercise. So, does walking while doing daily chores at home or climbing the stairs in the house, work as a substitute for exercise?
Ans: Certainly. Avoid sitting continuously for more than half an hour and even the act of getting out of the chair and going to another chair and sitting helps a lot.

Qn: Is there a relation between heart problems and blood sugar?
Ans: Yes. Strong relationships since diabetics are more vulnerable to heart attacks than non-diabetics.

Qn: What are the things one needs to take care of after a heart operation?
Ans: Diet, exercise, drugs on time, Control cholesterol, BP, weight.

Qn: Are people working on night shifts more vulnerable to heart disease when

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

compared to day shift workers?
Ans: No.

Qn: What are the modern anti-hypertensive drugs?
Ans: There are hundreds of drugs and your doctor will choose the right combination for your problem, but my suggestion is to avoid the drugs and go for natural ways of controlling blood pressure by walk, diet to reduce weight and changing attitudes towards lifestyles.

Qn: Does dispirin or similar headache pills increase the risk of heart attacks?
Ans: No.

Qn: Why is the rate of heart attacks more in men than in women?
Ans: Nature protects women till the age of 45.

Qn: How can one keep the heart in a good condition?
Ans: Eat a healthy diet, avoid junk food, exercise everyday, do not smoke and, go for health checkups if you are past the age of 30 (once in six months recommended) ....

## From The Heart...

If one professes openly to having 'heard' the wisdom whisper from the heart, maybe they could talk (write) a bit about what it 'says'. The problem is that words are not adequate to convey the 'message', but here's an attempt to paint this abstract picture and give it a glimmer of meaning...

The wisdom whisper says - out of the utter silence: Come into the presence of ultimate reality – the very presence and residence of a unique 'being' some call God, or Lord, or Law - but the word is beside the point.

Coming into the presence is to be confronted with 'something' so powerful and so beyond anything ever thought or imagined, and so greater than a personal identity, that it is shocking and comes as a sudden rush of new awareness. But there's much, much more.

The effulgent presence is filled with the most beautiful light, and as one enters the light, the body presence is lost. Still the mind 'hears' that the personal identity is loved (and waves of nearly intolerably pleasant love wash over and over the new consciousness) and known and is divinely guided.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the washing over of love, all emotional baggage is dissolved, as is all guilt, all remorse, and all shame.

All that remains is this cradling, engulfing, enormous love... And next, what were the few remaining remnants of personal identity now dissolve into the light.

All sense of time becomes meaningless and irrelevant in this light. There is no 'time'. There is only the eternal moment. Yet there is conscious awareness...

And it seems that this awareness is itself now all-encompassing. The 'view' (for some accompanied by flashing lights and colors) is as if looking out over the entire universe. A startling rush of wisdom brings a sense that all is known. There is an impossible-to-explain sense of how 'everything' works and how all the interconnectedness of the universe is perfectly order. It is a stepping into perfection and an unassailable peace of mind.

The residual effects of the wisdom whisper go on and on. To touch upon a few: The 'person' who heard the wisdom whisper no longer exists. Hold on. It will make sense.

A realization that what was previously considered 'I' or a personal identity was really a secondary sense of reality - and now having heard the whisper of transcendence, a new reality - a primary reality is known.

This primary reality is 'home'. The day-to-day reality of material existence is incredibly enhanced, but at the same time is seen as what some traditions call 'illusory' - and as previously mentioned, is known as secondary to the new sense of awakened being.

This new reality is now clearly recognized as what Ramana Maharshi called the 'I-I', Buddha called the emptiness that is not nothing, Jesus called the kingdom of heaven within, and Carlos Castenanda called a separate reality. (To name a few).

The words of the mystics (Rumi's poetry) and all scripture come alive with meaning and back in the world (which one is now in, but not of) everyone is seen in a new loving light. It is recognized that the presence of this enlightenment is within everyone, and everyone who awakens sees the ultimate destiny of humankind as coming to this awakening. OK, hope this gives you a glimpse and/or a sweet reminder of the exquisite beauty of the effects of the wisdom whisper.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## What is the position of the world in Future?

Politicians, Scientists, and those who are responsible for making better tomorrow for individuals and society are facing dilemma. Nothing is certain. Conventional wisdom and new wave of thinking getting clashes in the minds of the humanity. Ultimately, when investigating the serious problems facing the world today, we can trace the source of all these social problems to the **human heart and mind**. And in seeking to determine our potential for overcoming all these problems, at least from a scientific perspective, it is important to consider the biological substrate of our human emotions and ways of thinking; the Brain. This is the organ that leads us to perceive all of these supposed distinctions and differences between people and is the organ responsible for creating the hostile, fearful or aggressive emotions that lead us to violent cruel and stupid behaviour in which we seek to harm one another.

The modern world is vastly different from the world inhabited by our remote ancestors, so responding in ways that were once adaptive and helpful could potentially cause our own destruction today. While these impulses may have protected early humans from truly life-threatening dangers, we often react in the same way to threats based on imagination or mental projection. Many may wonder if modern humans are simply walking around with caveman brains encased in our twenty-first century skulls, brain stamped with a date that expired one hundred thousand years ago, aren't we doomed?

With the technologial capacity to completely destroy all life on earth, do we really have the luxury of sitting around playing checkers for the next hundred thousand or million years until evolutionary forces can catch up and adapt our brains to modern conditions? Forunately, we are not doomed. Our brains may have circuitry that was adapted to the problems of our seemingly endless period of hunter-gatherer societies, but our brains have vast resources as well, resources that can be used to modify and reshape our customary ways of thinking and responding to the world around us. In fact, we have almost limitless untapped resources at our disposal.

We have the capacity for anger, hatred, prejudices and exaggerated fears, but we also have the capacity for kindness, compassion, tolerance and altruism. We have the more primitive emotions of the limbic system, but we also have the more

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

advanced neocortex, with its capacity for reasoning, critical thinking, creativity, and higher brain functions. And we have the choice of which responses to cultivate and strengthen.

Every moment of our lives, for instance, new connections-synapses are being formed between our nerve cells in response to new learning, to new experience. One million new connections are being formed for every second of our lives. We have the capacity to develop new circuits, establish new connections between nerve fibers in the brain, and forge new neural pathways that can reshape the very structure and function of the brain. This amazing capacity of the brain is called neural plasticity and increases in our understanding of brain plasticity have helped us realize that the brain is not an irrevocably fixed organ - so we can establish new programming that determines how we might respond to situations even to train our minds to perceive things in new ways. So the brain will allow us to find new non-violent ways to resolve disputes, new ways of interacting with our fellow human beings.

The fact that we can train our minds to be happy, genuinely happy, to be kinder and more compassionate. We need the **will to a bit of practice**. The neural equipment we're all issued at birth, the path to more peaceful, nonviolent world-one in which individuals enjoy inner personal happiness and outer societal happiness is inside us. So there is a cause for optimism, even celebration is possibility! Happiness leads to increased success!

**Have a nice day and may it be fully empty of content!!!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் செய்தி...

ஹரி ஓம்!
வணக்கம் வாசகர்களே!

கடந்த ஐந்து மாதங்களாக 'ஒளிமயம்' மூலம் உங்களைச் சந்திக்க முடியாது போய் விட்டது. காரணம் கைலாச யாத்திரையும் அதனால் ஏற்பட்ட விளைவுகளும்தான்! என்ன? 'விளைவுகள்' என்று கூறுகிறாரே! என நீங்கள் நிமிர்ந்து உட்காருவதும் புரிகிறது.

கைலாய உச்சி, நாம் இருக்கிற நிலைதான் ஞான நிலை என்பதை புரிய வைத்தது. ஞான நிலை என்பது விநோதமான அல்லது அதீதமான நிலை என்று எண்ணிக் கொண்டிருக்கும் வரை நாம் எதையோ தேடிக் கொண்டேதான் இருப்போம். நாம் இருக்கின்ற நிலைதான் ஞான நிலை என்று உங்களுக்கு நீங்களே உறுதி செய்து கொண்டால் போதும்.

புத்தரையும் நம்மையும் ஒப்பிட்டுப் பார்க்க முடியுமா? ரமணரையும் நம்மையும் ஒப்பிட்டுப் பார்க்க முடியுமா? என்று உங்களை நீங்களே தாழ்வாக மதிப்பீடு செய்து கொள்ள வேண்டாம். அவர்கள் ஏதோ ஒரு வகையில் பிரபலமடைந்து விட்டதற்காக மட்டுமே பெரியவர்களாக மதிக்கப்படுகிறார்கள். அடிப்படை நிலையில் அவர்களும் உங்களைப் போன்றே தங்களை முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அவர்கள் தங்களை எதிர்த்துப் போராடுவதில்லை. உங்களை மாற்றியமைக்க எதையும் தேடி ஓட வேண்டியதில்லை என நீங்கள் உறுதி செய்து கொண்டால் மட்டும் போதும் அனைத்து மாற்றங்களும் தாமாக ஏற்பட்டு விடும். உங்களுடைய இயல்பு நிலை இயக்கம் ஓர் ஆற்றைப்போல் தானாகவே ஓடித் தன்னைச் சுத்தப்படுத்திக் கொள்ளும். நீங்களே ஒரு புனிதப் பிரவாகமாக மாறி விடுவீர்கள்.

உங்களை அப்படியே ஏற்றுக் கொண்டு உங்களை எதிர்த்துப் போராடாமல் இருந்தால் நீங்கள் அனைவரும் இப்பொழுதே ஞானிகள் தான். ஞானமடைவதுதான் ஆன்மீகத்தில் அடைய வேண்டிய உயர்ந்த நிலையாக எல்லோரும் கருதிக் கொண்டிருக்கிறோம்.

ஆனால் சராசரி மனிதனைப் பொறுத்த அளவில் அனைத்துக் கவலைகளிலிருந்தும் விடுபட்டால் போதுமென்று எண்ணுகிறான். கவலைதான் நம்மைக் கட்டுப்படுத்துகிறது. கவலை இல்லாமல் இருந்தால் நன்றாக இருக்கும். பிரச்சனைகள் இல்லாமல் வாழ்ந்தால் நன்றாக இருக்கும். இது சராசரியாக எல்லோரும் நினைப்பது. ஆனால் உண்மை என்னவென்றால் ஞானமடைந்த நிலையில்தான் கவலைகள் எல்லாம் தீர்வு பெறுகின்றன. கவலைகள் தீர்வடைந்த நிலையில்தான் ஞான நிலையும் ஏற்படுகிறது. இரண்டுமே பிரிக்க முடியாத அளவில் ஒன்றாகவே உள்ளன.

**"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்-**
**தார்க் கல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது"**

என வள்ளுவர் சொல்லிச் சென்றிருக்கிறார். தாள் சேர்தல் என்பது விடுதலை அல்லது முக்தி நிலை; இறுதி நிலை.

பிரச்சனைகளிலிருந்தும் கவலைகளிலிருந்தும் விடுபட வேண்டுமானால் அவற்றை முதலில் புரிந்து கொள்ள வேண்டுமென ஜே.கே கூறினார். அவற்றை ஒருமுறை சரியாகப் புரிந்து கொள்வோமானால் நிரந்தரமாக அந்தப் பிரச்சனைகளிலிருந்து விடுபட்டு விடலாம். கவலையோ பயமோ நமக்கு ஏற்படும்போது, ஆய்வு செய்யும்போது அந்த நேரத்தில் சிறிது புரிந்தது போலவும் விடுபட்டது போலவும் தெரிகிறது. ஆனால் வேறொரு சூழ்நிலையில் கவலையும் பயமும் மீண்டும் வந்து விடுகின்றன. சாதாரண பிரச்சனைக்குத் தீர்வு கேட்டால் ஞானமடைந்து விட்டால் தீர்வடைந்து விடும் என்று கூறும்போது குடிக்கத் தண்ணீர் கேட்டால் ஒரு கிணற்றையே வெட்டச் சொல்கிறதுபோல் தோன்றலாம். பிரச்சனைகளில் இருந்து விடுபடுவது எவ்வளவு சுலபமோ அப்படித்தான் ஞானமடைவதும் அவ்வளவு சுலபம்.

நமக்கு மனோரீதியாக எத்தனையோ பிரச்சனைகள் இருக்கின்றன. அவற்றுக்கெல்லாம் மொத்தமாக 'மனக்கவலை' என்று பெயர். ஒரு மரத்துக்குப் பல கிளைகள் இருக்கும். ஆனால் அத்தனை கிளைகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கி இருக்கும் அடிமரம் ஒன்றுதான். அதனை வெட்டி விட்டால் அத்தனை கிளைகளும் அந்த மரத்தோடு சேர்ந்து வீழ்ந்து விடும். நமது மனக்கவலைகளும் இப்படித்தான் உள்ளன. மனப் பிரச்சனைகள் எல்லா வற்றுக்கும் அடித்தளம் ஒன்றாகவே உள்ளது. அந்த அடித்தளத்தைப் புரிந்துகொண்டு அதனை அப்புறப்படுத்திவிட்டால் எல்லாப் பிரச்சனைகளும் ஒட்டு மொத்தமாக வீழ்ந்து விடுகின்றன.

ஸ்வெட்டரை நமது உடலுக்குப் பொருந் தும் வகையில் அளவெடுத்து கம்பளி நூலால் பல நாட்கள் பொறுமையாக உட்கார்ந்து பின்னுவார்கள். அழகான கலர், கைகள், பைகள் விதவிதமான பூ வேலைப்பாடுகளும் இருக்கும். ஆனால் அந்த ஸ்வெட்டரிலுள்ள ஒரு நூலைப் பிடித்து இழுத்து விட்டால் மொத்த ஸ்வெட்டரும் கலைந்து வெறும் நூலாகிவிடும். அதுபோல் நமது பிரச்சனை களின் மையப்பகுதியைப் புரிந்து கொண்டு அப்புறப்படுத்தி விட்டால் நமது அனைத்துப் பிரச்சனைகளும் கலைந்து ஒன்றுமில்லாமல் போய்விடும்.

ஒவ்வொரு பிரச்சனைக்கும் தனித் தனியே தீர்வு காண வேண்டுமென்பது கிடை யாது. எல்லா பிரச்சனைகளுமே மொத்த மாகத் தீர்ந்துவிடும். ஞானமடைதல் என்பதும் இதில்தான் அடங்கியுள்ளது. மனப்பிரச்சனை தீர்வு பெறுவதும் ஒன்றுதான்; ஞான மடைவ தும் ஒன்றுதான்.

இந்த ஞானமடைவது எப்படி? அப்படி யென்றால் அது எப்படி? என்ற புரிவடை தலையும் கவலையொழித்தலையும் விவாதித் தறியும் பயிற்சிக் களமாக School of Self Realization (உன்னை நீ அறியும் விளக்கமும் பயிற்சியும்) பிரதி ஞாயிறு தோறும் 42 Calverley Trail ஸ்காபுரோவில் காலை 10 மணிக்கு அளிக்க இருக்கிறோம். தேவையான வர்கள் வரலாம். மதமோ, இனமோ தடையல்ல. நன்றி

அமைதி, அன்பு ஆசிகளுடன்
ஸ்வாமி பரமாத்மானந்தா

## அறுபத்து நான்கு கலைகள்

| | |
|---|---|
| 1 அக்கரவிலக்கணம் | 33 பூமி பரீட்சை |
| 2 இலிகிதம் | 34 சங்கிராம இலக்கணம் |
| 3 கணிதம் | 34 மல்யுத்தம் |
| 4 வேதம் | 36 ஆகரூடணம் |
| 5 புராணம் | 37 உச்சாடணம் |
| 6 வியாகரணம் | 38 தது வேடணம் |
| 7 நீதி சாத்திரம் | 39 மதன சாத்திரம் |
| 8 சோதிட சாத்திரம் | 40 மோகனம் |
| 9 தர்ம சாத்திரம் | 41 சவீகரணம் |
| 10 யோக சாத்திரம் | 42 இரச வாதம் |
| 11 மந்திர சாத்திரம் | 43 காந்தருவ வாதம் |
| 12 சகுன சாத்திரம் | 44 பைபீல வாதம் |
| 13 சிற்ப சாத்திரம் | 45 கவுத்துக வாதம் |
| 14 வைத்திய சாத்திரம் | 46 தாது வாதம் |
| 15 உருவ சாத்திரம் | 47 காருடம் |
| 16 இதிகாசம் | 48 நட்டம் |
| 17 காவியம் | 49 முட்டி |
| 18 அலங்காரம் | 50 ஆகாயப் பிரவேசம் |
| 19 மதுரபாடனம் | 51 ஆகாய கமனம் |
| 20 நாடகம் | 52 பரகாயப் பிரவேசம் |
| 21 நிருத்தம் | 53 அதிரிசயம் |
| 22 சத்தப் பிரமம் | 54 இந்திரசாலம் |
| 23 வீணை | 55 மகேந்திர சாலம் |
| 24 வேணு | 56 அக்கினித் தம்பம் |
| 25 மிருதங்கம் | 57 சலத் தம்பம் |
| 26 தாளம் | 58 வாயுத்தம்பம் |
| 27 அத்திர பரீட்சை | 59 திட்டித்தம்பம் |
| 28 கனக பரீட்சை | 60 வாக்குத்தம்பம் |
| 29 இரத பரீட்சை | 61 சுக்கிலத்தம்பம் |
| 30 கச பரீசை | 62 கன்னத்தம்பம் |
| 31 அசுவ பரீட்சை | 63 கட்கத்தம்பம் |
| 32 இரத்தின பரீட்சை | 64 அவத்தைப் பிரயோகம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுடன் சில வரிகள்...

- சேகர் ஷங்கர்

எத்தனை கோடி இன்பங்கள் வந்த போதும் அல்லது எத்தனை கோடி துன்பங்கள் வந்தபோதும் காலம் தன்பங்கிற்குக் கண்ணீரை மட்டுமே வடித்தபடி அது தனது செயலைத் தொடர்ந்து விடுகிறது. உண்மையில் இன்பமும் துன்பமும் கூட இருமையே. இது வெறும் 'மனோ நிலை' தான் என்கின்ற போதும் இவற்றால் அது பாதிப்படையாது பிரம்மம் விதித்தபடி அது தனது செயலை மட்டுமே செவ்வனே செய்கிறது.

சரியும் தவறும் ஒரு நாணயத்தின் இரு முகங்கள்போல நாம் ஒரு செயலைச் செய்ய முனைகிறபோது சரியாகச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் செய்கிற போதும் தவறு என்பதும் வருவது இயல்பானதே. ஆனால் தவறைத் தவறு என உணர்கிறபோது எமது அடுத்த முன்னெடுப்பு சரியாகவே அமையும் என்பது நம்பிக்கை. நாம் எப்போதும் செய்வ தெல்லாம் சரியாகவே இருக்க வேண்டும் என நினைப்பதும் செயல் படுவதும் வரவேற்க வேண்டிய தொன்றாகிற போதும் அதில் தவறு நேர்கிறபோது அதை உளமார ஏற்று அதில் இருந்து திருந்த அல்லது சுட்டிக்காட்டப்படும் போது அதை ஏற்றுக் கொள்கிற மனோநிலை வருகிறபோது மட்டுமே எம்மால் ஒரு காரியத் தைச் சரியாகச் செய்ய முடியும். வெறுமனே பட்டமும் பதவியுமோ அல்லது அனுபவமோ கூட ஒருவரது செயலை அதன் விளைவு களைத் தீர்மானித்துவிட முடியாது. மாறாக அடக்கமும் பண்பும் சரி பிழைகளை ஏற்றுக் கொள்கிற மனோ நிலையும்தான் விளைவு களையும் பலன்களையும் தீர்மானிக்கும். எல்லாவற்றையும் விட மேலாக 'தர்மம்' என்பதே அதன் போக்கை நிர்ணயிக்கும். மேலும் 'தர்மம்' என்கிற பாதையில் நாம் செல்கின்றபோது விளைவுகளையும் பலன் களையும்கூட ஒருவர் எதிர்பார்ப்பது இயல்பான போதிலும் அது தவறானதே. இதையே கிருஷ்ண பகவான் "செயல்களை மட்டுமே நீ செய்; பலன்களை என்னிடம் விட்டுவிடு" என்கிறார்.

எமது குறுகிய நலன்களுக்காக 'தர்மத்தை' நாம் வளைக்க முடியாது. ஒருவர் எவ்வளவு படித்தவராக இருந்த போதிலும் அனுபவம் பெற்றவராக இருந்தபோதிலும் வெறும் ஆசா பாசங்களுக்காகவோ அல்லது உணர்ச்சி வசப் பட்டு எடுக்கின்ற முடிவுகளுக்காகவோ போலி வரட்டுக் கௌரவத்திற்காகவோ அல்லது பணம் புகழுக்காகவோ "நான் செய்வதே சரியானது" என்று நினைப்பது அதர்மப் பாதைக்குத் துணை நிற்பதுபோல் தெரியவே இல்லையா? பிழையைப் பிழை என ஏற்றுக் கொள்கிற மனோ நிலையை வளர்த்துக் கொள்வோம். மாறாக அப்பிழைக்குள் நின்று கொண்டு அதைக் காப்பாற்ற முயல்வது அல்லது அதிலுள்ள தவறுகளை மறைக்க முயல்வதும் **"தற்காலிகமாக"** வேண்டுமா னால் சாத்தியமாகலாம். பாதை (கோணம்) மாறுகிற நேர் கோடு என்றுமே தனது இலக்கை அடைய முடியாது.

இராவணனின் மனைவியாகிய மண்டோ தரி மிகவும் நல்லவளாகவும் சரியான கருத்துக் களைக் கூறித் தனது கணவனை மாற்ற முயன்றவள். அவள் அதர்மத்திற்குத் துணை போகவில்லை. எனினும் இராவணன் இறந்த போது கணவன் என்ற பாசம் அவளை மறைத்து விடுகிறது. அப்போது ஜாம்பவான், "மகளே நீ பிரம்மாவின் மகள். உனது வினைப் பயனால் நீ இராவணனைக் கணவனாக அடைந்தாய். பிறப்பும் இறப்பும் இயல்பானதே. போன பிறப்பில் இவன் உனது கணவனல்ல. அடுத்த பிறப்புப் பற்றித் தெரியாது. எனவே கவலையை விடு" என அவளிடம் இருந்த மாயையைக் கலைத்து விடுகிறார்.

'பிதாமகர்' என்று போற்றப்படுகின்ற பீஷ்மர் தான் மேற்கொண்ட சபதத்திற்காக அதர்மத்திற்குத் துணை போனார். எத்தனையோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல கருத்துக்களை கூறியும் செயல்களைச் செய்தும் 'திருதராஷ்டிரன்' என்ற அதர்மத்தை திருத்த முடியவில்லை. நேர்மையையும் தர்மத்தையும் காப்பாற்றுவதற்குப் பதிலாக "தான் மேற்கொண்ட சபதம்" என்ற வறட்டுப் பிடிவாதத்துள் நின்றாரே ஒழிய தர்மத்தையும் நீதியையும் அவரால் பின்பற்ற முடியவில்லை. விதுரர் தனது அமைச்சனின் கடமையாகிய நீதியைக் கூறல் என்கிற தர்மத்தின் அடிப் படையில் எத்தனையோ தடவைகள், "பிதா மகரே நீங்கள் அஸ்தினா புரத்தை நேசிக்கிறீர் களே ஒழிய மக்களை அல்ல" என்பதை எடுத்துக் கூறியும் 'சபதம்' என்ற மாயை அவரைக் கட்டிப் போட்டு காலம் தன்பங்கிற்கு அவர்மேல்கூட களங்கத்தையே பூசியது. துரியோதனனின் தம்பியாக இருந்த போதிலும் 'முமுட்சு' சத்தியத்தைக் காப்பதற்காக தர்மரின் படைக்கு வந்து விடுகிறான். அதர்மத்திற்குள் நின்று அதைத் திருத்தலாம் எனக் கனவு காண்பதைவிட அதைவிட்டு வெளியேறி இருக்க வேண்டும் என்பதையே இவையெல் லாம் எமக்கு உணர்த்துகிறது.

சாந்த சொரூபியான இயேசுநாதரே தேவாலயத்தில் பன்றிகளையும் பறவைகளை யும் கொலை செய்து விற்பனை ஸ்தலமாக மாற்ற முயன்றவர்களை எதிர்த்து பறவை களையும் பன்றிகளையும் விடுவிப்பதற்காக கலகம் செய்து தனது கோபத்தை வெளிக் கொணரவில்லையா? பத்தே வயது நிரம்பிய தனது மகன் ராகுலனிற்குப் பட்டம் கட்டுவதற் காக புத்தரின் தந்தை முயற்சியெடுத்து, "நீ போய் உன் தந்தையிடம் ஆசிபெற்று வா" என அனுப்பியபோது "இதோ ஆசி தந்தேன் மகனே" எனக்கூறி தான் வைத்திருந்த திருவோட்டை அவன் கையில் கொடுத்து அவனையும் பிக்குவாக்கவில்லையா? தனது மகன்தானே; நாட்டை ஆளட்டுமே! என பாசத்தையோ அல்லது தனக்கு வேண்டியவன் தானே எனவே விட்டுக் கொடுக்கலாம் என தான் கொண்ட கருத்தை, தர்மத்தை, உண்மையை வளைத்துப் பாசத்திற்கு அடிமையானாரா?

ஒரு படைப்பாளியின் கையிலிருந்து வெளிவருகின்ற சேதிகளானவை ஏன்? எதற் காக? என்று கேள்விகளற்று அவை சமூகத் தையே சென்றடைகின்றன. இவ்வாறான நிலையில் "உலகிற்கே நீ எழுதியவை; அது உனக்கல்ல" என்று நீதியை மூடி மறைப்பதோ அல்லது போலியான தாமே அவற்றைக் கையாளாது, நடைமுறைப்படுத்தாது வெறும் வெற்று வேஷங்களைப் புனைந்து எத்தனை காலம் சமூகத்தின் சிந்தனைகளைப் பிழை யான வழிகளில் புறந்தள்ள முடியும்?

"அமிர்த சஞ்சீவினி" என்ற மந்திரத்தை எத்தனையோ காலம் தவமிருந்து சிவனிட மிருந்து பெற்ற அசுரகுல குருவான சுக்கிராச் சாரியார் இறக்கின்ற அசுர சக்திகளை யெல்லாம் எழுப்பிவிடுவதாக புராணக் கதைகள் கூறுகின்றன. இருந்த போதிலும், 'தர்மம்' என்பதே எப்போதும் வெல்லும் என்பதை இன்றுவரை இத்தனை பிரளயங்கள் ஏற்பட்ட பின்னரும்கூட காலம் காலமாக நடந்த நிகழ்வுகள் எமக்கு உணர்த்துகின்றன.

எமது மனத்தில் நல்ல எண்ணமும் கெட்ட எண்ணமும் மாறிமாறி வருகின்றன. பத்து நிமிடங்களின் முன்பிருந்த மனோநிலை இக்கணத்தில் இல்லை. ஆனாலும் தீய எண் ணங்களே எமது மனதில் அதிகமாக ஏற்படு கின்றன. எனவேதான் அதிலிருந்து மீட்சி பெற நல்வழிகளையும் நல்ல நூல்களையும் கற்று அமைதி, சாந்தம், கருணை என்னும் 'அன்பு' என்பதை மையமாக்கி தர்மத்தை விழுமிய மாகக் கொண்டு காலமும் காலத்தின் மைந்தர் களான எழுத்தாளர்களும் படைப்பாளிகளும் அறிஞர்களும் வழிகாட்டுகின்றனர். இவ்வழிகள் அவர்களால் பின்பற்றப்படுகிறபோது மட்டுமே அவற்றைக் காலம் அங்கீகரிக்கிறது. ரிஷி களும் முனிவர்களுமோ மனதைக் கொன்று விடுங்கள், 'மனோ நாசம்' என்பதே சரியானவழி எனப் போதிக்கிறார்கள். இதுவே உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷங்கரின் பார்வையில்...

# கைலாச யாத்திரை
# காதலும் கருணையும்

குருதேவாய நமஹ!
ஹரி ஓம்!

முதலில் இதை எழுதுவதற்கு முன்பாக ஒரு விடயத்தை நாம் குறிப்பிட விரும்புகிறோம். அது யாதெனில் இங்கு எழுதப்படுபவை கற்பனைப் படுத்தப்பட்டவையோ அல்லது மிகைப்படுத்தப்படுவதோ அல்ல. இன்னும் கூறப் போனால் இவை எழுத்தாளர்களால் எழுதப் படும் நாவல்களோ அல்லது சிறுகதைகளின் தொகுப்போகூட இல்லை. உண்மையில் எமது குருவான "ஸ்வாமி பரமாத்மானந்த சரஸ்வதி" அவர்கள் தாம் தியானத்தில் கண்டறிந்த உண்மைகளை மாத்திரமே எமக்கு உபதேசித தருளினாார். அவ்வுபதேசங்களைச் செவி வழியாக ஏற்று எமது அகமும் புறமும் ஏன் ஒவ்வொரு ஷெல்களும் எவ்வாறு ஏற்றுக் கொண்டன, சரி வாருங்கள்! இனி அகத்தே நீங்கள் கண்ட (பெற்ற) உபதேசத்தைப் புறத்திலே கண்டு கொள்ளுங்கள் என எல்லாம் வல்ல இறைவனும் இறைவனின் பிரதிநிதி களாகப் பூவுலகில் வந்து உதித்த குருமார் களில் ஒருவராகிய எமது குருவும் வழங்கிய அருளாசியே இப்புனித யாத்திரையாகும்.

(ஜனன, மரணம்) வாழ்க்கை என்ற சாகரத்தில் (கடலில்) மிதந்துவரும் கட்டுமரங் களாகிய ஆன்மீக அன்பர்களிற்கு "கலங்கரை விளக்கமாக" இருந்து கரையேற்ற கரையை அடைய உதவுகின்றவர்களே 'குரு' எனப் படு கின்றவர்களாவர். 'யாத்திரை' என்பது உண்மை யில் நாம் திட்டமிட்டோ அல்லது யோசித்தோ நிகழ்வது அல்ல. எமது குருவானவர் June 20, 2009இலே இவ்யாத்திரையை மேற்கொள்ள முன்பாக "இந்தப் புனித யாத்திரையில் இணைந்து கொள்வதற்கு மூல காரணம்; இறை அருளேயன்றி உங்கள் வசதிகளோ அல்லது வாய்ப்புக்களோ அல்ல" என்பதை முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதைக் குறிப்பிட்டிருந்தார். இதை நாம் இங்கே ஏன் குறிப்பிடுகிறோம் என்றால், "நடக்க முடியா தவை" (சாத்தியக் கூறுகளற்றவை) எனக் கணிக்கப்பட்டவை, படுபவை எல்லாம் எவ்வாறு சாத்தியமாகின என்பதற்கு இச்சம்பவங்கள் எல்லாம் ஒரு உதாரணமே. இன்னும் கூறப் போனால் இந் நிகழ்வுகளை ஒருவரோ அல்லது இருவரோ மட்டுமே பார்த்தவையோ அல்லது உணர்ந்தவையோ அல்ல. எமது குருவின் சீடர்களுள் (16) பதினாறு சிஷ்யர்கள் ஆகிய

(1) தவமணி அம்மா (65)
(2) பசுபதி ஐயா (75)
(3) பசுபதி அம்மா (75)
(4) கண்ணம்மா அம்மா (72)
(5) சிவராசா அம்மா (69)
(6) வாணி அம்மா (63)
(7) சறோ அம்மா
(8) வசீகரி (44)
(9) வாகீசன்
(10) சசி
(11) கரன்
(12) சபேசன்
(13) கனெக்ஸ் அண்ணா (60)
(14) மதன் (28)
(15) சங்கர் (43)
(16) இவர்களுடன் குரு "ஸ்வாமி பரமாத்மானந்தா" அவர்கள் (64)

ஒவ்வொருவரும் அகக்கண்களாலும் புறக் கண்களாலும் கண்டுணர்ந்த உண்மைகளே என்பதை எக்காலத்திலோ, எந்த நாட்டிலோ இருந்து இதை வாசிப்பவர்களுக்கு நீங்கள் இதைப்பற்றிய தகவல்களை மேற்கூறப்பட்டவர் களில் யாரையேனும் அழைத்து அறிந்து கொள்ளலாம்.

கதிரவன் எவ்வாறு தனது ஒளியினால் பூமியிலிருந்து தோன்றும் நச்சுக்களையும் எண்ணற்ற தேவையற்ற பற்றீரியாக்களையும் சுட்டெரிக்கின்றதோ அவ்வாறே மனித மனங் களில் இருந்து எழுகின்ற கழிவுகளையும் தீய எண்ணங்களையும் கர்மப் பதிவுகளையும் தனது "ஞான ஒளியினால்" சுட்டெரிப்பவரே 'குரு' ஆவார்.

இனி நடைபெற்ற சம்பவங்களை நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயன்றளவில் தொகுத்தும் எளிய நடைமுறை யில் எல்லோரும் புரிந்து கொள்ளக் கூடிய வாறும் எழுத்துருவில் பதிக்க முயல்கையில் வாருங்கள்! நீங்களும் எம்முடன் யாத்திரையில் பயணம் செய்யலாம்.

### விசாவிலேயே வெளிக் காண்பித்த இறையருள்

நாம் பயணம் தொடங்க முன்பாக இந்திய விசாவிற்கு விண்ணப்பிப்பதற்காக Brampton (பிறம்ரன்)ல் புதியதோர் அலுவலகம் திறக்கப்பட்டதையடுத்து அங்கு சென்று விசாரித்தோம். நாம் கனேடியப் பிரஜைகள், எவ்வளவு காலத்தில் எமக்கு விசா தருவீர்கள்? எத்தனை தடவை (Entry) தருவீர்கள்? என வினாவினோம். அவர்கள் தமக்குக் கிடைத்த / தெரிந்த தகவலின்படி உங்களிற்கு நாம் ஒரு கிழமையில் (7 நாட்கள்) Multiple Entry உடன் கூடிய விசா வழங்கப்படும் எனக் கூறினார்கள். எனவே நாம் ஒரு கிழமையில் கிடைக்கும் தானே ஆகவே அதைப் பின்னால் பார்க்கலாம் என சற்றுத் தாமதப்படுத்திவிட்டு பயணச்சீட்டை முற்கூட்டியே பதிந்தால் குறைந்த விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனால் அதிலே அதிக கவனம் செலுத்தி ஆனி மாதம் 20ம் திகதி 2009ம் ஆண்டில் பயணத் திகதியைப் பதிவு செய்து 16 பேருக்கும் பயணச் சீட்டை முற்றாக்கியிருந்தோம்.

பின்னர் Brampton இந்தியத் தூதரகத் தில் விசாவிற்காக விண்ணப்பித்தோம். அவர்கள் கூறியபடியே 7 நாட்களின்பின் (முதல் திங்கள் கிழமை விண்ணப்பித்து அடுத்த திங்கள்) Brampton இந்தியத் தூதராலயத்திற்கு வந்த போது அவர்கள், “இன்னும் வரவில்லை. சில வேளைகளில் (10) பத்து நாள்களாகும். எனவே நீங்கள் இன்னும் 3 நாட்கள் கழித்து வாருங் கள்; நாம் ரொறன்ரோ அலுவலகத்துடன் தொடர்பு கொள்கிறோம்” எனக் கூறினார்கள். சரியென நாம் மீண்டும் 3 நாட்களின்பின் புதன் கிழமை காலை 10 மணியளவில் Brampton அலுவலகத்திற்குச் சென்றபோது அவர்கள், “மன்னிக்க வேண்டும்; நீங்கள் கனேடியப் பிரஜைகளாக இருந்த போதிலும் உங்கள் பிறப்பு இலங்கையில் என்பதனால் இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியத் தூதரகம் விசா எளிதில் வழங்குவதில்லை எனவும் அதற்கு 4 - 6 கிழமைகள் தேவை” எனக் கூறினார்கள். நாம் ஏற்கெனவே எமது பெயர்களை emailஇல் அனுப்பி இந்தியத் தூதரகத்திலிருந்து அனுமதி (விசா பெறுவதற்கு) பெற்றாகிவிட்டது என emailஇல் Approved என எழுதப்பட்டதைக் காண்பித்தோம். அவர்கள் அதை வாங்கி அதில் ஓர் பிரதியையும் எடுத்து email செய்து தொலைபேசியில் தொடர்பு கொண்ட போதும் இந்திய தூதராலயத்தால் அது மறுக்கப்பட்டு பாஸ்போர்ட் (கடவுச்சீட்டு) வழங்கிய திகதியில் இருந்து 4 - 6 கிழமைகள் முடிந்தால் மட்டுமே விசா வழங்கப்படும் எனக் கூறிவிட்டார்கள். இது எமக்குச் சற்று அதிர்ச்சியாக இருந்த போதிலும் நாம் நேரடியாக Toronto தூதரா லயத்திற்குச் சென்றோம். அங்கு நிலமைகள் மிகவும் மோசமாக இருந்தது. அவர்கள் எம்மை உள்ளேயே அனுமதிக்கவில்லை. முதியோரையும் ஓரளவு வயதான பெண்களை யும் உள்ளே அனுமதிப்பதைக் கண்டு உடனடி யாகத் தொடர்பு கொண்டு பெண்களில் இருவரை ஒருவாறாக உள்ளே சென்று கதைப் பதற்கு அனுமதித்தனர். ஆனால் அதுவும் எமக்கு சாத்தியமான பதிலாக இல்லை. எனவே தளர்ந்த மனதுடன் வீடு திரும்பினோம்.

இதில் பிரச்சனை என்னவென்றால் இரண்டாவது தடவையாக இதே வருடத்தில் “வேலை செய்பவர்கள்” எல்லோரும் விடு முறைக்கான விண்ணப்பத்தை விண்ணப்பித்து அதற்கான தவணையும் காலமும் (1 மாதம், Jume 20 - July 20) ஆகப் பெற்றுக் கொண்டிருந்தனர். மற்றும் நாம் யாத்திரை செல்லும் காலம் (High season) அதாவது பயணச் சீட்டில் இலகுவில் மாற்றம் செய்யப் படக்கூட இயலாத அல்லது கூடிய தண்டப் பணம் செலுத்தப்பட வேண்டிய நிலை. தளர்ந்த மனதுடன் சென்றபோதும் அடுத்த நாள் மீண்டும் சென்று முயல்வது என்ற நோக்குடன் மீண்டும் தூதராலயத்திற்குச் செனறபோது இம்முறை சற்றே வயதானவராகக் காணப்பட்ட ஓர் ஆணையும் ஒருபெண்ணையும் உள்ளே செல்வதற்கு அனுமதித்தார்கள். அதற்கிடையே நாம் வேறு முயற்சிகள் ஏதாவது எடுக்கலாமே! இதுதான் சரியாகக்கூட இருக் குமா? அது தவறான வழி என்பது தெரிந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்தும் அதைவிட வேறு வழி இல்லை. அவர்கள் பணத்தையே எதிர்பார்க்கிறார்கள் என அதற்குரிய ஒருவருடன் தொடர்பு கொண்டு தலைக்கு 200 டொலர்கள் எனப் பேரம் பேசிய போதும் அவ்வழியும் நிராகரிக் கப்பட்டது. இதற்கிடையே உள்ளே சென்றவர் களிடம் நீங்கள் 2 தினங்கள் கழித்து முயற்சி செய்யுங்கள் ஆனாலும் நாம் உங்களுக்கு உத்தர வாதம் அளிக்க முடியாது எனக்கூறி விட்டனர். அவர்கள் வெளியே வருவதற்கு நீண்ட நேரம் எடுத்ததனால் (3-4 மணித்தியா லங்கள்) நாம் வெளியே காரினுள் இருந்து போனவர்கள் நல்ல மறுமொழியுடன் வரவேண் டும் எனத் 'தியானம்' செய்து கொண்டிருந் தோம். ஆனால் 'பிரம்மம்' என்ன நினைத் ததோ தெரியாது. ஒருவேளை "தேவை கருதியா நீங்களும் தியானம் செய்கிறீர்கள்" என்பதை எமக்கு உணர்த்திற்றோ என இப்போது எண்ணத் தூண்டுகிறது.

முரண் பாடான கருத்துகளுடன் இருந்த போது நீங்கள் நாளை முயற்சித்துப் பாருங்கள் என 'ஸ்வாமி' (குரு) கூறினார். சரியென இம்முறை 3 ஆண்கள் மாத்திரமே (ஏனெனில் எல்லோராலும் தொடர்ந்து விடுமுறை எடுக்க முடியாததால்) சென்றபோது இம்முறை இருவரை முதலிலும் பின்னர் ஒருவரையுமாக மூவரையுமே அனுமதித்தனர். இச் செய்தியை குருவிடம் கூறுவதற்காக நாம் தொலைபேசி யில் முயன்றபோதும் குருவுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. ஏனெனில் அவர் தியானத்திலிருந்தார். நீண்ட நேரக் காத்திருப் பின் பின்னர் மாலை 2 மணியளவில் எமக்கு விசா தருவதாகவும் அதற்குரிய List (லிஸ்ற்)ஐ எடுத்து அதன்படியே அனைத்துக் கடவுச் சீட்டுக்களிற்கும் Double Entry உடன் கூடிய விசாவை வழங்கினார்கள். உடனடியாக ஸ்வாமியுடன் நாம் தொடர்பு கொண்டபோது எம்மிடமிருந்து Negative எண்ண அலைகள் தோற்றாதவாறு தான் தியானத்தில் Positive Wavesஐ எமக்குத் தொடர்ந்து அனுப்பிக் கொண்டிருந்ததாகக் கூறினார்.

பாருங்கள் இறையருளை. இலங்கைத் தமிழர் ஒருவருக்கு 2 கிழமையில் Double Entry உடன்கூடிய விசா அந்த நேரத்தில் (காலவரையில்) கிடைக்கக்கூடியதா? சாத்திய மில்லாத ஒன்றை சாத்தியமாக்கி எமக்கு முதலிலேயே பச்சைக் கொடியைக் காண்பித் தாரே. சாதாரணமாக நோக்கினால் இது என்ன சாதாரண விடயம்; பணத்தைக் கொடுத்தால் கொடுத்து விடுகிறார்கள் என யாராவது நினைத்தால் அந்த நேரத்தில், நாம் எதிர் நோக்கியிருந்த சூழ்நிலையில் எந்தவொரு கனேடிய இலங்கைத் தமிழரும் அவ்வாறான ஒரு குறுகிய கால கட்டத்தில் இந்திய விசாவைப் பெற முடியாது; பெறவும் இல்லை என்பதை நாம் ஆதாரத்துடன் தெரிவிக்க விரும்புகிறோம்.

உண்மையில் நாம் ஓரடி இறைவனை நோக்கி நகர்த்துகிறபோது அவனோ பத்தடி எம்மை நோக்கி நகர்த்தி 'பக்தவச்சலன்' என் பதை ஒரு சேவகனாக வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு வந்து விடுகிறான் என்பதை உணர்த்தியது.

மேலும் ஒரு விடயத்தை இத்துடன் குறிப்பிட விரும்புகிறோம். கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற தியான வகுப்பு ஒன்றில் ஸ்வாமி, "இறைவனையும் நம்பு; ஆனால் ஒட்டகத்தையும் கட்டிவிடு" என நபிகள் கூறியதை எடுத்துரைத்தார். அதாவது இறை வனை நம்பு அதேசமயம் உன்னால் செய்யக் கூடியதையும் செய்ய மறவாதே என்பதாகும். இதை நாம் ஏன் கூறுகிறோம் என்றால் "படித்ததைப் பரீட்சித்தும் விடு" என்பதையே எமது குருவும் விரும்புகிறார்.

## நெடிய பறப்பும் நெகிழ்ந்த நேபாளமும்

குறிக்கப்பட்ட திகதியாகிய (20.06.2009) அன்று பிற்பகல் 2.45 மணிக்கு விமானம் புறப்படுவதற்குத் தயாராக Toronto Pearson விமான நிலையத்தில் அனைவரும் தமது பிரயாணத்தின் முன்னர் 3 மணி முன்பதாக சந்தித்தனர். அனைவரின் முகங்களிலும் மகிழ்ச்சி ஒளி ஜொலித்திருக்க இதழ்களில் புன்னகை விரிந்து "இதயக் கமலம் முகிழ்ந்து ஈன்றதையும் இயற்கையையும் இப்போது பார்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கூறியது போலிருந்தது. நீண்ட நாட்களில் அல்லது காலத்தின் பின் பதினாறு (16) பேரைக் கொண்ட குழுவானது புறப்படுகிறது என்றால் நித்திரைக்கே நேரமற்று நிம்மதி யில்லாது பணம் பணம் என இயந்திரமாக அலையும் இம்மேற்குலக நாட்டிலிருந்து குடும்பமாக இருந்தாலே மகனும் மகளும் பெற்றோரும் ஏன் கணவனும் மனைவியுமே சந்திக்க முடியாமலிருக்கும் இந்த அமெரிக்கக் கண்டத்திலிருந்து பயணப்பட்டோம் என்பதே எமது சக்திக்கு அப்பாற்பட்ட தொன்றாகும். மேலும் கூறுவதென்றால் இக்குழுவில் முதிய வர்கள் அதிகமாகவும் இளையவர்கள் குறை வாகவுமே இருந்தனர். இன்னும் கூறுவதென் றால் தினமும் ஒவ்வொருவரும் உட்கொள்ளும் மாத்திரைகளும் மருந்துப் பெட்டிகளுமே ஒவ்வொருவரின் கைப்பைகளிலும் கனத்துக் கொண்டிருந்தது. இவற்றையெல்லாம் மீறி அல்லது பெரிதாகப் பொருட்படுத்தாது ‘தல யாத்திரை’ என்பது முக்கியமாகப் படுகிறது என்றால் தொலைதூரப் பயணத்திற்கும் முதிர்ந்து முற்றி விட்ட எலும்புகளும் நரம்பு களும் ஈடுகொடுக்குமா? என்பதையும் பொருட் படுத்தாது பயணப்படுகிறார்கள் என்கிறபோது இவற்றையெல்லாம் மீறிய துணிவும் தைரிய மும் எங்கிருந்து வந்தது? கரப்பான் பூச்சிகளை யும் தொசுக்களையும் ஈக்களையும் பார்த்தே பல வருடங்களாகிவிட்ட நிலையிலும் அனல் தெறிக்கும் வெயிலும் கொட்டும் மழையின் கொடுமையினையும் மறந்து சொகுசான வாழ்க்கையினையும் இறங்கினால் பஸ், ஏறினால் கார் என பழக்கப்பட்டுவிட்ட மேற் குலக வாழ்க்கையில் இவற்றையெல்லாம் விட அதிகமான சந்தோஷத்தையும் மகிழ்ச்சியை யும் கொடுக்கின்ற ஏதோவொன்று எங்கோ ஒளிந்து கொண்டிருக்கிறது. அதை உபதேசத் தில் பெற்று உணர்ந்த நாம் உடலாலும் அனுபவிக்க வேண்டுமே என எண்ணியதும் எண்ணத்தைக் கொடுத்ததும் எது?

வந்திருந்த சுற்றத்தார் பயணப் பொதி களை நிறுத்து அதை Moving Beltஇல் இட்டு Boarding Passஐப் பெற்றுக் கொடுத்து Checking Point வரை வந்து கையசைத்து விடைபெற எமது நீண்ட பயணம் ஆரம்ப மாயிற்று. Toronto இலிருந்து புறப்பட்ட நாம் அதிகம் சோதனைகட்குட்படாது Washington விமான நிலையத்தில் வந்து இறங்கினோம். பின்னர் அங்கிருந்து Doha (Qatar) இற்கும் பின்னர் Qatar இலிருந்து நேபாளத்தின் Kathmandu திருபுவன் விமான நிலையத்தில் காலை 8.30 இற்கு வந்து சேர்ந்தோம். பிரயா ணத்தால் அனைவரும் களைப்படைந்திருந்த போது விமானத்தினுள் அனைவருக்கும் தர மான சைவ உணவைப் பரிமாறியும் அதனுள் தமிழ்ப் பாடலைக் கேட்டும் தமிழ்ப் படங் களைப் பார்த்தும் விஞ்ஞான நுட்பங்களையும் அனுபவிக்க ஓர் சந்தர்ப்பமாகவும் அமைந்தது. உலகத்திலேயே “இந்து சாம்ராஜ்யம்” என்ற பெயருள்ளது நேபாளம் மட்டுமே. இதற்குரிய விசாவைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் அங் கேயே பெற்றுக்கொள்ள எதுவித சோதனை கட்கும் உட்படாது வெளியேறினோம்.

நாம் ஏற்கனவே விடுதிகளை இணை யத்தில் தேடியபோதும் விசாவும் ரிக்கற்றினதும் முடிவுகள் சரியாகக் கிடைக்கப் பெறாததால் அதைப் பதிவு செய்ய முடியவில்லை. இறுதியாகப் புறப்படுவதற்கு முதல் நாள் இரவே மின்னஞ்சலில் 16 பேர் Kathmandu இற்கு வருகிறோம் எனத் தகவல் கொடுத்தோம். இதை எமது குருவே மேற்கொண்டார். அவர் தேர்ந்தெடுத்த விடுதியின் பெயரோ வித்தியாச மானது. Encounter இதன் விளக்கம் எதிர்பார்க் காது சந்திப்பது அல்லது எதிர்கொள்வது. பெயரிற்கு ஏற்றபடியே செயலும் அமைந்தது. நாம் வெளியே சென்றபோது அந்த விடுதி முகாமையாளர் சுஜன் என்பவர் நீண்ட நேரமாக எமக்காக செவ்வந்தி மாலைகளுடன் காத்திருந்து ஒவ்வொருவருக்கும் மாலையிட்டு வரவேற்றது எமக்கு எதிர்பாராத ஓர் மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஏனெனில் முதல் நாள் மின்னஞ்சல் செய்கிறோம். அடுத்த நாள் தெரிந்தவர்களைப்போல மாலையுடன் வரவேற் பது என்பது சாதாரண நிகழ்வு அல்ல. பயணப் பொதிகளை அவர்களே எடுத்து 20-22 ஆசனங்கள் கொண்ட பஸ் வண்டியின்மேல் ஏற்றி எம்மை ஒவ்வொருவராக இன்முகத்துடன் கைகுலுக்கி குசலம் விசாரித்து அழைத்துச் சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்குமே பசுமையும் இயற்கை அழகு நிறைந்திருப்பதையும் நாம் சென்றபோது அவ தானிக்கக் கூடியதாக இருந்தது. எல்லோருக்கும் குளிரூட்டப்பட்ட அறைகளில் தங்குவதற்கும் நல்ல உணவை சென்றவுடனேயே அளித்து குளித்து இளைப்பாறுமாறும் மாலையில் நேபாளக் கலாச்சார நிகழ்விற்கும் இரவு உணவிற்கும் ஏற்பாடாகி இருந்தது. எத்த னையோ காலங்களின் பின்னர் இரசாயனக் கலவைகளற்ற தூய்மையான மலையடிவாரக் காற்றை நுகர்ந்தவாறே பயணக் களைப்பினால் சோர்வடைந்திருந்த எமக்கு மருந்துகளற்ற தூக்கம் ஆட்கொண்டது.

மாலையில் எழுந்து மீண்டும் குளித்து எல்லோரும் "கலாச்சார நிகழ்வும் இராப் போசனமும்" என்பதற்கு இயற்கையன்னை தனது அழகையெல்லாம் எவ்வாறு பரப்பி இருக்கிறாள் என வியந்தவாறே கூடவே இமய மலை எவ்வாறு அதன் எல்லைகளை விரித் திருக்கிறது என விழிகளால் பெயர்த்தெடுத்த வாறே எமது விடுதியிலிருந்து சுமார் 30 நிமிட தொலைவிலுள்ள ஒரு விடுதிக்குச் சென்றோம். அங்கே வரவேற்புப் பிரமாதமாகவும் புதுமை யாகவும் இருந்தது. அதையும்விட வேற்றின கலாச்சார மக்களும் அங்கு நிறைந்திருந்தனர். நிலத்திலே நிலவாடைகள் விரித்து சாய்ந்து கொள்ள வசதியாக குந்தமைத்து அழகாகவும் சுத்தமாகவும் அவ்விடம் பேணப்பட்டது.

அவற்றை எல்லாம் அடித்து வீழ்த்து வது போல நேபாளத்தின் புதுமையான இசையும் இசைக்கேற்றாற்போல் நாட்டியமும் மயில், மாடு என மிருகங்களின் தோற்றத்தை ஏந்தியிருந்தனரா அல்லது அவையே சற்றுப் பருமனாகி உள்ளே நுழைந்து நாட்டியமாடு கின்றனவா என்பது தெரியாமல் நேர்த்தியாக வும் அழகாகவும் புதிய இசை இங்கு பிறந்ததோ என அற்புமான நிகழ்வும் அதைத் தொடர்ந்து நேபாளத்தின் வித்தியாசமான அதுவரை சுவைத்திராக உணவு வகைகள் பரிமாறப்பட்டன. அறுசுவைகள்தான் இருக்கின் றன. ஆனால் அவையெல்லாம் எவ்வாறு வேறுபட்ட மனிதர்களால் வேறுபட்ட விதத்திலே கையாளப்படுகின்றன என்ற விந்தையான நோக்குடன் இதற்குரிய மூலம் எங்கே இருக் கிறது என்பதை சிந்திக்க வைத்ததுபோல் இருந்தது. இவ்வாறாக ஜூன் மாதம் 22ம் திகதியை மீண்டும் எமது விடுதியிலேயே கழித்தோம்.

## பழம்பெரும் பசுபதி நாதரும் பொங்கியெழும் புத்தொளிப் பிரவாகமும்

அடுத்தநாள் காலை (23.06.2009) சுமார் 7.30 மணியளவில் நாம் வரலாறு காண முடி யாத ஆனால் புத்தரின் காலத்திற்கே முற்பட்ட தாகக் கூறப்படும் பழம் பெரும் ஆலயமும் பூமிப்பந்திலே இருக்கின்ற சிவாலயங்களுள் கைலையங்கிரிக்கு அடுத்ததாகப் பேசப்படும் 'பசுபதிநாதர்' ஸ்தலத்திற்குப் புறப்பட்டோம். இயற்கையன்னையின் எழில் வீச்சையும் ஆதித்த பகவானின் ஒளிவீச்சையும் இரசித்த வாறே உலகெங்கிலும் காணமுடியாத சிவ சின்னமான உருத்திராட்ஷ மரங்களும் இமய மலையின் தொடர் ஒன்றாகிய ஒரு குன்றிலும் எம்பெருமானின் கோவில் காட்சிதரத் தொடங் கியபோதே அவரது "சாந்நித்யமும்" எம்மை ஆட்கொள்ள ஆரம்பித்தது. மெதுவாக சுற்று முற்றும் பார்த்தவாறு நடந்தாலும் மனதிலே எம்மையறியாமலே எம்பெருமானின் திருநாமம் உச்சரிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

பசு - பதி - பாசம் என்கிற மூன்று சொற்களையும் தன்னகத்தே கொண்டு எழுந் தருளியிருப்பவரே பசுபதி நாதராகும். என்னே ஆச்சர்யம்! அண்ணலை அண்மிக்க அண் மிக்க இனம் புரியாத ஓர் உணர்வும் உடல் எங்கும் பொங்கிப் பிரவாகிக்கும் அருள் அலைகளுடனும் எல்லைகளுள் பிரவேசித் தோம். கோயிலின் பழமை தோற்றத்தில் தெரிய, ஈசனின் புத்தொளி இதயத்தில் தெரிய, கண்ணீர்ப் பிரவாகம் விழிகளில் தெரிய இருப்பது எங்கெனப் பிரக்ஞையற்று (108) எண்ணற்ற சிவலிங்கங்கள் எதிரே தோன்ற சுற்றிச் சுற்றி கால்கள் நடந்தன. நடந்தோமா நடத்தப்பட்டோமா என்பதை நிர்ணயம் செய்ய முடியவில்லை.

முற்றும் துறந்த முனிவர்களாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்காலங்களாலுமே முற்றாக உணர்ந்து கொள்ள முடியாத முழுமுதற் கடவுளாகிய எம்பெருமானை எம்மால் எவ்வாறு விளக்க முடியும்.

வார்த்தைகளில்லை, பேச்சில்லை, நினைவில்லை நிற்கிறோம் என்ற பிரக்ஞை இருந்தது. எதிரே தெரிந்த சற்றே உயரமான தோர் மேடையில் (கட்டிடத்துள்) கால, நேர தேசங்களை எல்லாம் கடந்தும் பால் மணம் மாறாது பசுபதி நாதர்—"சிவலிங்கமாய்" காட்சி கொடுத்துக் கொண்டிருந்தார். அருகில் யாரோ நிற்பது தெரிந்தது. கையில் செம்பும் நீரும் கொடுத்து 'அபிஷேகம்' செய்ததாய் நினை விருந்தது. வேண்டுமானால் சிவலிங்கத்தைத் தொட்டுக் கொள்ளலாம் எனக் காதில் விழுந்தது. இரு கைகளையும் சிவலிங்கத்தில் தொட்டு வணங்கியபோது தலை தன்னை யறியாது சிவலிங்கத்தில் சரிந்தது. ஆயிரம் கோடி சூரியர்கள் தலைக்குள் புகுந்து கொண்டது போன்ற ஓர் உணர்வு. எங்கே இருக்கிறோம்; என்ன செய்கிறோம்? எதுவுமே புரியாதபோது கழுத்திலே உருத்திராட்ச மாலையை யாரோ போட்டு பிரக்ஞையைக் கொணர்ந்தது போலிருந்தது. சிலரிற்கு உருத் திராட்சம் கைகளில் பிரசாதமாக வழங்கப் பட்டது. தொடர்ந்து நடந்தோம். சுற்றிச் சுற்றி எங்கெல்லாமோ காண்பித்ததும் ஏதேதோ கூறியதாகவும் நினைவிருந்தது. ஆனால் என்ன என்பது புரியவில்லை. பராசக்தி அன்னை யின் ஓர் சிறிய ஆலயத்தின் முன் நின்றோம். எல்லா நேரங்களிலும் அன்னையின் திருக் காட்சி கிடைப்பதில்லை. குறிக்கப்பட்ட நேரத் தில் மட்டும் அபிஷேகத்திற்காகவும் ஆரா தனைக்காவும் திறக்கப்படுமாம். ஓர் சிறிய சாவித் துவாரத்தினூடாக வரிசையில் நின்று ஒவ்வொருவராக அன்னையைத் தரிசித்தோம். சிலர் ஒரு கரையைப் பார், சிலரோ வேறோர் இடத்தினூடு தெரிகிறது என்றனர். கண்களைச் சாவித் துவாரத்தில் வைத்துச் சுழற்றியபோது வெறும் இருள் மட்டுமே கண்களிற்குத் தெரிந் தது. சுருவம் இருப்பதாக உணர்வு கூறிய போதும் மனமோ "தாயே காட்சி கொடுக்க மாட்டாயா?" என வேண்டிக் கொண்டது.

உணர்வில் இருளாக சுருவம் இருப்ப தாகத் தோன்றிய அவ்விடத்தில் திடீரென மலர் மாலையொன்று ஒளியாகத் தென்பட்டதுபோல் இருந்தது. கைகள் கூப்ப கண்கள் நீரைக் கசித்தன. மனம் ஆனந்தக் கூத்தாடியது. மேலும் நடந்தோம். ஓர் அதிசயம் இருந்தது. இதுவென்ன தஞ்சையின் நந்தி தேவர் இடம் மாறி இங்கு எழுந்தருளியிருக்கிறாரோ என நினைக்கத் தோன்றியது. (ஏனெனில் அது மிகவும் பெரியது) ஆட்டம் அசைவற்று உருவமோ சுருவமோ என்பது தெரியாமல் அவ்விடத்தில் படுத்திருந்தது. நாம் அருகில் சென்று சுற்றி நின்று "மகாதேவரே" எனக் கையை அதன் நெற்றிமீது தடவிக் கொடுத்த போதுதான் அது உயிருள்ளது எனத் தெரிந்தது. தலையை அசைத்து எமது வருகையை அது வாழ்த்தியது போலிருந்தது. கேள்வியொன்றும் எழுந்தது. இத்தனை பெரிய பசு நாம் அங்கிருந்த நேரத்தில் (15-20 நிமிடமாக இருக்கலாம்) எவ்வாறு அசைவற்று உணவைக் கூட அசைபோடாது உணவோ நீரோ அற்று என விடை காண முடியாத வினாக்களிற்கு விடை எங்காவது இருக்கத்தான் வேண்டும் என மனம் கூறியது.

மேற்கொண்டு சென்றபோது அன்னை 'கங்காதேவி' அங்கும் தனது எல்லையை விரித்திருந்தாள். ஆனால் வீச்சு (நீர்ப்பிரவாகம்) குறைவாகக் காணப்பட்டது. கீழே ஓர் பிணம் சுற்றிக்கட்டப்பட்டு எரிப்பதற்குத் தயாராக இருந்தது. "சமூக அந்தஸ்தில்" உயர்ந்தவர்கள் அங்கு எரிக்கப்படுவதாய்க் கூறினர். பிணத் தையோ அல்லது அதை எரிப்பதைப் பார்ப்பதோ நல்லது என ஸ்வாமி கூறினார்.

ஒரு விடயத்தை இங்கு நாம் இப்போது தான் குறிப்பிடுகிறோம். நாம் ஆலயத்துள் நுழைகிறபோதே அபிஷேகம், விஷேடப் பிரார்த்தனைகள் பணத்திற்கு ஏற்றாற்போல் செய்து தரப்படும் எனப் பேரம்பேச முற்படுகிற போது, "மன்னிக்க வேண்டும்! நாம் ஆன்மீக வாதிகள். எமக்கு இந்தப் பேரம் பேச்சுக்களில் எல்லாம் உடன்பாடில்லை. நாம் வந்தது தரிசிக்கவே. மற்றவர்களைக் கொண்டு செய் யப்படுவதில் எமக்கு உடன்பாடில்லை. நாமே எம்மைத் தரிசித்துக் கொள்கிறோம். தயவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து எம்முடன் பேரம் பேசுவதை நிறுத்தி விடுங்கள்" என ஸ்வாமி மிகவும் தெளிவாகக் கூறி விட்டார். எனவே அது எம்மைப் பற்றிக் கொள்ளவில்லை.

சற்று தூரம் நடந்தபோது, "வாருங்கள் அனைவரும் வழமைபோல் தியானம் செய் வோம்" என ஸ்வாமி கூறினார். எல்லோரும் சற்று விசாலமாகவும் நேர்த்தியாகவும் காணப் பட்ட ஓர் மரமொன்றின் அடியில் அமர்ந்து தியானத்தில் ஈடுபட்டோம். மிகவும் அற்புத மாகவும் இதுவரை காணப்படாது வித்தியாச மான அமைதியும் சுகமும் இருந்ததாகவும் பூரண சூரியன் கதிர்களுடன் காட்சி கொடுத்த தாகவும் கூறப்பட்டபோது ஸ்வாமி சிரித்துக் கொண்டே "வெளியிலும் அவ்வாறே" எனக் கூறினார்.

இவ்வாறாக ஆலய தரிசனத்தின் பின்னர் வெளியே சென்றோம். அப்போதுதான் ஸ்வாமி, "உருத்திராட்ஷமும் இரத்தினக் கற்களும் ஸ்படிக மணிகளும் இங்குதான் விளைகின் றன. வாருங்கள் நாம் எமக்குத் தேவையான வற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம் எனக் கூறினார். இவ்வாறு நாம் அனைவரும் பல முகங்கள் கொண்ட உருத்திராட்ஷம் (5 முகம் சாதாரணம், 6 முகம் விசேஷம், 1 முகம் அபூர்வம்) அவற்றுள்ளும் மிகவும் சிறிய அளவிலான உருத்திராட்ஷ மணிகள் நிமிடம் ஒன்றிற்கு எத்தனையோ அதிர்வலைகளை (Vibration) உண்டாக்கக் கூடியனவையாகவும் காணப்பட்டவற்றை ஸ்வாமியே தெரிந்தெடுத்து அனைவருக்கும் பெற்றுக் கொடுத்தார். மேலும் ஓர் விடயத்தையும் அங்கு தெரிந்து கொண் டோம். ஸ்படிக மணிகள் இருளில் உராய்வை ஏற்படுத்துகிறபோது நெருப்புப் பொறிகளை (Spark) கக்குகின்றன. ஆனால் அவற்றை அணிந்து கொள்ளும்போதோ அவை உடலிற்கு குளிர்ச்சியைத் தருகின்றன என அதைக் காண்பித்துக் காட்டினார்கள்.

இவ்வாறாகப் பிறர்கூறக் கேட்டும் புத்தகங்களில் வாசித்தும் பின்னாட்களில் குருவின் தரிசனம் கிடைத்த பின்பாக உபதேசத்தின் மூலம் உணர்ந்தும் கொண்ட இறை தரிசனம், இறையைப் பற்றி அறிதல் என்பதைப் புறக்கண்களாலும் புறவுடம்பினா லும் ஏற்று அகம் குளிர மெய்சிலிர்த்தவாறு விடுதிக்குத் திரும்பினோம்.

குருவானவர் எல்லோர்க்கும் வேற்றொரு நாட்டிற்குச் சென்றால் அந்நாட்டில் உள்ள உணவுகளையும் பழக்க வழக்கங்களையும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதைப் புகட்ட வேண்டும் என்ற நோக்குடன் "நேபாள நாட்டின்" மதிய போசனத்தைத் தெரிவு செய்ய அனைவரும் அதைச் சுவைத்து ரசித்து உண்டு மகிழ்ந்தோம். ஒரே வகையான உணவு வகைகளும் (சோறு, பிட்டு, இடியப்பம், ஒரே விதமான கறி வகைகள்) கறி வகைகளுமே பழக்கப்பட்டதன் விளைவாக அதையே கோருகின்ற மனோ நிலையுடன் பழக்கப்பட்ட எமக்கு புதிய சுவையும் வித்தியாசமான விதமும் பிற கலாச்சாரங்களில் இருந்தும் நல்லவற்றைத் தெரிவு செய்யக்கூடியவற்றை யும் 'ஸ்வாமி' ஒரு பாடமாகவே எமக்கு அதை உணர்த்தினார்.

சற்று நேரம் இளைப்பாறியதும் மீண்டும் கருணையின் பிறப்பிடமாகவும் இரக்கத்தின் சின்னமாகவும் போற்றப்படுகின்ற புத்த பெருமா னின் பிரபல்யமான கோவிலுக்கு (பௌத்த நாத) எம்மை அழைத்துச் சென்றனர். அதுவும் Kathmandu City இலேயே அமைந் திருந்தது. நெருக்கமான பகுதியில் அமைந் திருந்தாலும் மிகவும் பிரம்மாண்டமானதாகவும் அழகியதாகவும் அதன் சின்னமாகிய அரச மரத்தை (மிகவும் பெரியது - அரச மரத்தைப் போதி மரம் எனவும் கூறுவர்) வாசலிலேயே கொண்டிருந்தும் மிகவும் பிரம்மாண்டமான தோர் சுற்று வட்டத்தைத் தன்னகமாக அக் கோயில் கொண்டிருந்தது. மிகவும் பிரம்மாண்ட மானதோர் புத்த பகவானின் சுருவமும் அதை அண்மித்து சூலத்துடனும் சற்றே வேறுபட்ட ஓர் முகத்தைக் கொண்ட சுருவமும் காணப்பட்டது. இது என்னடா சிவனைப் பெயர்த்தெடுத்து சற்றே உருவ மாற்றம் கொடுத்து இங்கே இருத்தி விட்டார்களோ என எண்ணத் தோன்றியது. அதைப்பற்றிய சரியான விளக்கம் இல்லாவிடினும் அது 'மகாவீர்' என்பவருடைய சிலை எனவும் அவர் அதர்மத்தை அழிக்கின்ற வர் என மக்கள் நம்புவதாகவும் எமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டி விளக்கம் சொன்னது எமது நினைவிற்கு வருகிறது. பிரம்மாண்டமான கோயிலாகையால் அமைதியுடனும் ஆழ்ந்து நோக்கியவாறும் பெரிய வட்டமாக சுற்றி நடந்தோம்.

மணிகள் தொங்கின. அவற்றை ஒலித்த வாறே நடந்தபோது அமைதியும் மனதில் மகிழ்வும் தானாகவே குடிகொண்டிருந்தது. மையத்தில் எல்லோரும் குழுமியிருந்து தியானம் செய்தோம். புத்த பகவானையும் தரிசிக்கும் பாக்கியம் கிடைக்குமா? என மனதால் வேண்டியபோது வாசலிலிருந்து எம்மை நோக்கி வந்த ஒரு புத்த துறவி எமது கண்களுக்குப் புத்தராகவே காணப்பட்டார்.

இப்போதுதான் இந்த நேபாளம் இவ்வ ளவு அழகாகவும் செழிப்பாகவும் அதையும் விட அமைதியுடனும் (எமது பார்வைக்கு) ஏன் காணப்படுகிறது என்பதை ஓரளவு அறியக் கூடியதாக இருந்தது. தொடர்ந்து நாம் Kathmandu City இலுள்ள மிகவும் பெரியதோர் Shopping Mallஇற்கு அழைத்துச் செல்லப் பட்டோம். சுற்றிப்பார்வையிட்ட எம்மவர்களில் சிலர் வேறு திசையில் சென்றபோது குறிக்கப் பட்ட நேரத்தில் குறிக்கப்பட்ட இடத்தில் சந்திக்குமாறு கூறியும் அவர்கள் அந்நேரத் திற்கு அவ்விடத்திற்கு வரவில்லை. எனவே அவ்விடத்தைவிட்டு வேறோர் இடம் சென்ற நாம் அங்கே நின்றபடி பிரிந்தோரின் வரவை எதிர்பார்த்திருந்தோம். எமது வழிகாட்டி மீண்டும் அவ்விடம் சென்று நீண்ட நேரத்தின்பின் அவர்களை அழைத்து வந்தார். இதில் பிரச்சனை என்னவென்றால் எம்முடன் வந்தவர் களில் பலர் வயது வந்தவர்களும் நேரத்திற்கு மருந்துகளை உட்கொள்பவர்களுமாவர். அவர் களால் அம்மருந்துகள் எடுக்கப்படாவிடில் அவர்களின் நிலை சிக்கலாகி விடும். காலை யில் பயணத்தை ஆரம்பித்த நாம் சோர் வடைந்து இருந்தோம். மீண்டும் விடுதிக்கு வந்து சற்று ஆறி மாலை அனைவரும் உட் கார்ந்து தேநீர் உட்கொள்ளும்போதே எமது குருவானவர், "ஒரு ஆன்மீகவாதியாகக் கருதப் படுபவனிற்கு கட்டுப்பாடு (Discipline) என்பது மிகவும் அவசியமானது. குறித்த நேரத்தில் குறித்த இடத்திற்கு வருகிறேன் / செய்கிறேன் என்றால் அதைக் கடைப்பிடிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். மனதை எமது கட்டுக் குள் கொணர முயல வேண்டும் என்பதை எல்லோருக்கும் கற்பித்தார்.

## அதியுயர் மலையும் ஆண்டவன் அழைப்பும்

அடுத்தநாள் காலை (June 24, 2009) இல் சுட்டெரிக்கும் வெயிலிலும் சற்றும் இழகாத வெள்ளிப் பனிகளைத் தாங்கிய உலகத்திலேயே அதியுயர்ந்த மலையாகக் கருதப்படுகிற கடல் மட்டத்திலிருந்து 8.848 meter (29,029 ft) உயரம் கொண்ட இன்றைய உல்லாசப் பயணிகளை அதிசயிக்கவும் ஆச்சரியப்படவும் வைக்கின்ற அதை விடவும் அதன் சிகரத்தைத் தொட்டு சாதனை படைக்க வேண்டும் என அயராது முயன்று கொண்டிருக் கும் சாதனையாளர்களை ஈர்த்துக் கொண் டிருக்கிற நேபாளிகளால் சாகர் மாதா (Sagar Matha) எனவும் உலகால் (Mount Everest) எவரெஸ்ட் மலைத் தொடர் எனவும் அழைக் கப்படுகின்ற அந்த மத்திய இமாலய மலைத் தொடர்களிற்கு அதன் அழகைக் கண்டும் வனப்பைப் பற்றியும் தெரிந்து கொள்வதற்காக எமது குருவால் பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்பட்ட Kathmandu உள்ளூர் விமான நிலையத்திற்குச் சென்றோம். நீண்ட நேரம் காத்திருந்தோம் ஆனால் எமக்கு எதுவிதத் தகவலும் வரவில்லை. ஏனெனில் அன்று காலநிலை முகில்களால் சூழப்பெற்று மழை பெய்வதற்குரிய சூழல்களே அதிகமாகக் காணக்கூடியதாக இருந்தது. தன் பொற் கிரணங்களால் இருளையுதைத்து அனைத்து ஜீவராசிகளுக்கும் உயிர் கொடுத்து வாழ்வு காட்டும் ஆதவனைக் காணவில்லை. இதுவென்ன மாயம் என்று யோசித்தவாறு இருந்தபோது விமானச் சிப்பந்தி ஒருவர் வந்து முகில் கூட்டமாக ஒளியில்லாமல் இருந்தால் விமானம் பறக்க முடியாது. ஏனெனில் மேலே உயரத்தில் நீங்கள் எதையும் பார்க்க முடியாது. மற்றும் விமானம் செல்லும் திசை தெரியாது. மலை முகடுகள் எங்காவது விமானத்தை முட்டக்கூடும் எனவே காலநிலை சரியான பின்தான் விமானம் புறப்படும். அதுவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் தாமதிக்க வேண்டும் எனக் கூறினார்.

நாம் மாறுபட்ட கருத்துக்களுடன் இருப்பவர் இருக்க, தியானம் செய்பவர்கள் தியானம் செய்ய, கதைப்பவர்கள் கதைக்க, வேடிக்கை பார்ப்பவர்கள் வெடிக்கை பார்த்துக் கொண்டிருந்தோம். வேற்று நாட்டினரும் வேறுபட்ட மக்களும்கூட அச்சிறிய விமான நிலையத்தில் காத்திருக்கின்றபோதுதான் அவ்வதிசயம் அல்லது இறைவனால் அனுப்பப்பட்ட தூது / செய்தி எமக்குக் கிடைத்தது. தாடியுடனும் காவியுடையுடனும் ஒருவர் இருப்பதைப் பார்த்து எம்முள் ஒருவர் அவருடன் சென்று கதைத்தார். அப்போது அவர் தான் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர் என்றும் கைலாச மலைக்குச் சென்று கொண்டிருப்பதாகவும் கூறியதைக் கேட்டவுடன் உடனடியாக அவர் அதை எமது குருவுக்குத் தெரிவித்தார். அப்படியா? என ஆச்சரியப்பட்ட குருவானவர் அவருடன் விபரங்கள் அறிந்தபோது "நீங்களும் கைலாச மலைக்குச் செல்லலாமே" என வேண்டிய தகவல்களைக் கொடுத்து அனைவரையும் பிரமிப்பில் ஆழ்த்தினார்.

சற்று நேரத்தின்பின் "இன்று காலநிலை காரணமாக விமானம் ரத்து செய்யப்படுகிறது" என்ற அறிவிப்பின் பின்பு நாம் மீண்டும் விடுதிக்குப் பயணமானோம். வண்டியினுள் அமர்ந்தபடி "காரணமில்லாமல் காரியமில்லை; பாருங்கள் இன்று ஏன் எமது பயணம் தடைப்பட்டது என நினைக்க முயல்கையிலேயே இறைவன் கைலாயத்திற்கு அழைப்பு விடுத்திருக்கிறார்" என குரு கூறினார்.

உண்மையில் குருவிடம் கைலாசம் செல்வதற்கான தயாரிப்பு இருந்த போதிலும் அவர் அதைத் தன் வாயால் எமக்குக் கூறவில்லை என்பதை அவரே கூறினார். ஆனால் அதை எமக்கு எழுத்தில் தரப்பட்ட தயாரிப்புகளிற்கான முன்னோட்டத்தில் (தயாரிப்பு 2) "நான்கு நாடுகள் யாத்திரை செல்லச் சித்தமாக உள்ளீர்கள் எனவே உங்களிற்குச் சில முன் ஆயத்தங்கள் பற்றி அறிவுறுத்த வேண்டி உள்ளது..." என Sep 22, 2008இல் அனைவருக்கும் வழங்கப்பட்ட தமிழ்ப் பிரதியில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார். அன்று மாலையே அதற்குரிய தயாரிப்புகளில் குருவும் எம்மவர்களும் குதித்தார்கள். பிரயாணம், அதற்குரிய ஒழுங்குகள், பாஸ்போர்ட், விசா, படங்கள், பணம் என எல்லாத் தயாரிப்புகளும் நேர்த்தியாக நடைபெற்றன.

அடுத்த நாள் காலை விரைவாகவே எழுந்து (Mount Everest) எவரெஸ்ட் மலைத் தொடரைக் காண்பதற்காக அதிகாலையிலேயே மீண்டும் உள்ளூர் விமான நிலையத்தை நோக்கிப் பயணித்தோம். குறிப்பிட்ட நேரத்தில் விமானமும் புறப்படத் தயாராகியது. என்னே ஆச்சரியம்! நாம் 16 பேர். அந்த விமானமும் எமக்காக முன்கூட்டியே தயார் செய்யப்பட்டது போல் அமைந்திருந்த ஆசனங்களும் சரியாகப் 16. ஒரு பக்கத்தில் 8 இருக்கைகளும் இன்னோர் பக்கத்தில் 8 இருக்கைகளுமாக முன்னால் 2 விமானிகளுக்கான இருக்கைகளும் அதன் பின்னால் 1 ஆசனம் விமானப் பணிப் பெண்ணுக்கும் மட்டுமே அமைந்திருந்தது.

கதிரவனோ தன் கிரணங்களால் கலைகளின் பொக்கிஷத்தைக் கண்களுக்கு விருந்தாக்கிக் கொண்டிருந்தார். என்னே எழில்! கனவா, நனவா என்பதுகூடப் புரியவில்லை. எங்கு பார்த்தாலும் சுற்று முற்றும் மலைத் தொடர்கள் வெள்ளிப் பனியை அள்ளிப் போர்த்தி வெகு லாவகமாகக் காட்சி கொடுத்துக் கொண்டிருந்தன. ஒரு புறத்தில் 'அம்மன்' பிறந்ததாகக் கருதப்படும் 'அன்ன பூரணி' எனப்படும் மலையைச் சிப்பந்தி காண்பித்தார். பறந்து கொண்டிருந்த விமானம் அந்தரத்தில் அவ்வாறே நிற்க பணிப்பெண் ஒவ்வொருவராக அழைத்துப் போய் முன்னால் உள்ள விமானிகளின் கண்ணாடிகளூடாக ஒவ்வொரு மலைத் தொடரையும் அதன் அழகை விளக்கியும் அவற்றைப் படம் எடுப்பதற்கும் அனுமதித்தது, பிரம்மதேவன் படைப்பாளியா அல்லது மிகப் பெரிய ரசிகனா என்பதை எமக்கு கேள்வியாக்கி இருக்கிறார். அதன் அழகை எழுத முடியாது; சொல்ல முடியாது. மிகப்பெரிய ரசிகனாகுங்கள், கண்டு களியுங்கள் என்பதைத் தவிர எதையும் எம்மால் கூற முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கள்ளுண்ட வண்டு போல" நாமும் விடுதிக்குத் திரும்பினோம். எமக்குத் தொடர்ந்து பயணம் ஏற்பாடாகி இருந்தது.

## திரிசூலி ஆலும் திரிபுர சுந்தரியும்

மீண்டும் ஒரு தடவை நேபாள நாட்டின் சமையலின் இரகசியத்தை வியந்தவாறே விடுதிக்கு வந்து நாம் Pokara சென்று அங்கிருந்து விமான மூலம் "முக்திநாத்" என்ற வரலாற்றுப் பெருமை கொண்ட ஸ்தலத்திற்கு விஜயம் செய்வதாக ஏற்பாடாகி இருந்ததால் அனைவரும் அதற்குரிய பயணப் பொதிகளைத் தயார் செய்து தேவையானவற்றை எடுத்துக் கொண்டு தயாராக வெளியே பஸ்வண்டி (24 - 25 ஆசனங்கள்) ஒன்று தயாராகி இருந்தது. ஒரு வழிகாட்டியையும் எம்முடன் அனுப்பி இருந்தனர். வண்டி "குளிரூட்டப்பட்டதாகவும்" (AC) கூறினர்.

ஆதவன் தன் கோபாக்கிரணங்களால் எம் உள்ளத்துள் உள்ள கழிவுகளை எரிக்கிறாரா? அல்லது மரத்துப்போன உடல் களுக்கு இப்போதாவது உறைக்கிறதா? என நினைத்தாரோ என்னவோ அவரின் உஷ்ணத் தை எம்மால் தாங்க முடியவில்லை என்பதே நிஜம். ஆரம்பத்தில் AC என்னவோ சரியா கவே வேலை செய்ததால் சற்று ஆறுதலாக இருந்தது. அங்கிருந்து Kathmandu சுமார் 3 மணி நேரம் பிரயாணத்தால் "Manakamana" (மணக்கமனா) (Mana - மணம்) (Kamana - விரும்பியதை) என்ற இடத்தில் கேட்ட வரங் களை எல்லாம் அள்ளிக் கொடுக்கும் எம் அன்னை 'மகா சக்தி' எழுந்தருளி இருப்பதா கவும் அங்கு சென்று நாம் அவரைத் தரிசித்துச் செல்லலாம் எனவும் கூறினர்.

இதுவரை எமக்கு (இப்பயணத்தில்) வழிகாட்டிகள் (Guide) அனைவரும் பெயரிற் கேற்றபடியே நடந்து கொண்டனரா அல்லது இறைவனே அந்தவுருவெடுத்து வந்து எம்மை எல்லாம் அழைத்துச் சென்றானா? என்பதை இப்போது எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்கள் ஒவ் வொரு விடயத்தையும் விளக்கிக் கூறிய விதம், கஷ்டங்கள் வருகிறபோது அதைத் தவிர்க்க அவர்கள் மேற்கொண்ட சமயோசிதம், உணவையும் நீரையும் எமக்குத் தேவையான நேரத்தில் எங்காவது அழைத்துச் சென்று கொடுத்த விதம், இவற்றுடன் இன்முகத்துடன் எந்நேரமும் இருந்து தமது பணியைச் செய்த விதம் இன்னும் நிறைய சொல்லப்போனாலும் அவற்றைப் பின்னால் விளக்குகிறோம்.

இவ்வாறாக மலைத் தொடர்களும் ஆறுகளும் வனமும் பசுமையும் வயல்களும் நிறைந்த இவற்றுடன் "கள்ளமற்ற உள்ளத் தைக் கொண்ட நேபாளத்தின் குடிமக்களை"க் கொண்ட நாட்டின் அழகை ரசித்தவாறே பயணித்தோம். பஸ் வண்டியும் "மணக்கமனா" வைச் சென்றடைந்தது. அழகைச் சொல்ல முடியாது. சந்தர்ப்பம் வாய்த்தால் சென்று பாருங்கள், ரசியுங்கள், தரிசியுங்கள் என்பதைத் தவிர எம்மிடம் ஏதுமில்லை. இமயமலைத் தொடரின் உச்சியில் அன்னையின் ஆலயம் அமைந்திருந்தது. (Top of the hill) அதன் கரைகளில் 'திரிசூலி' என்ற ஆறு ஓடிக் கொண்டிருந்தது. நாம் மலைமேல் செல்வதற்கு Cable Car (தொங்குமான்) எனத் தமிழில் அழைப்பதுண்டு. இதிலேயே செல்ல வேண் டும். நிறைந்த கூட்டம், வரிசையாக நின்று எமது தவணை வந்ததன் பின்பு நாமும் ஏறிப்பார்த்தபோது உடலும் உள்ளமும் பறந்து கொண்டிருந்தது. மலை, பள்ளத்தாக்கு, ஆற்றோட்டம், மலைகளில் ஆங்காங்கே குடிசைகள், ஆகா... இதை நாம் எழுதிக் கொண்டிருக்கிறபோதே அங்கேயே சென்றாகி விட்டது. குறிக்கப்பட்ட இடத்தில் இறங்கி உள்ளே நடந்தோம். பழமையான கட்டிடங்கள், புதுமையான முகங்கள், இயற்கை, இயற்கை சார்ந்த சூழல், சுத்தமான காற்று... நீண்ட தூரம் மேல் நோக்கிய ஆனால் சுற்றிச் சுற்றி சீமென்ராலும் கற்களாலும் அமைக்கப்பட்ட பாதைகளில் இரு புறமும் வியாபார ஸ்தலங்க ளும் உணவு விடுதிகளும் கட்டிடங்களும் நிறைந்திருக்க இதுவென்ன மன்னராட்சிக் காலத்தில் எழுத்தாளர்களால் வர்ணிக்கப்படும் பிரதேசத்துக்கு எப்போது வந்தோம்? என எண்ணிய படியே இருந்தும் ஆறியும் மெதுவாகவே நடந்தோம்.

மேலே அன்னையின் இருப்பிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்தது. கற்களும் சீமென்ரும் கொண்டு அமைக்கப்பட்ட சற்று வெளியான பிரதேசத்தில் இரண்டு முகடுகளைக் கொண்ட உயரமான குடில் போன்றதோர் அமைப்பு காணப்பட்டது. படிகளில் ஏறி மெதுவாகச் சென்றோம். எல்லோர் மனங்களிலும் இனம் புரியாத ஓர் அமைதி குடி கொண்டிருந்தது. கண்களில் நீர் கசிந்திருந்தது. கைகளைக் கூப்பியவாறே ஆலயத்துள் சென்றோம். நிறைந்த கூட்டம், மெதுவாக ஒருவர்பின் ஒருவராகச் சென்று அன்னையைத் தரிசித்தபோது மெய்சிலிர்த்தது. அன்னை புதுவிதமாக நிலத்தில் (தரையில்) பிரதட்ஷணமாகியிருந்தாள். அன்னையைப் போர்த்த மலர்களும் அட்சதையும் மஞ்சளும் சில்லறைகளும் நிறைந்திருந்தன. "கேட்ட வரங்களைத் தருகின்றவள் இவ்வன்னை" என ஸ்வாமி கூறினார். அன்னையின் முகவழகைச் சொல்லி அழகை எழுத்துக்களால் வரையறைக் குள்ளாக்க நாம் விரும்பவில்லை. அமைதியாக வெளியேறினோம்.

வெளியே மணி கட்டப்பட்டிருந்தது. அதை அசைத்து ஒலியெழுப்ப விரும்பியவர் கள் ஒலியெழுப்பினார்கள். இதைத்தான் "தெய் வீகச் சூழல்" என்பார்களோ. அதுதான் இதுவோ என எண்ணத் தோன்றியது. சற்று நேரம் அமர்ந்துவிட்டு மெதுவாகக் கீழிறங்கினோம். சிலர் அருகே 'நடராஜர்' கோயில் இருப்பதா கவும்கூறி அங்கு சென்று அவரையும் தரிசித்து வந்தனர்.

பசியும் தாகமும் அனைவரையும் வாட்டி எடுத்தது. அங்கு கீழே வந்து ஓர் உணவு விடுதியுள் சென்று (ஓர் குடில்) உட்கார்ந்தோம். உணவை இரு சிறார்கள் (பையன்கள்) பரிமாறினார்கள். ரசித்துச் சுவைத்தோம். மெதுவாக இறங்கி நடந்து வந்து "Cable Car" ஐ அண்மித்தோம். பொதுவாக நாம் எங்காவது சென்றால் ஒருவரோ அல்லது இருவரோ யாராவது ஏதாவது பொருட்களைத் தவற விட்டனரா? எனப் பரிசீலிப்பது வழக்கம். Cable Car இல் ஏறி அக்கரையை அடைந்து பஸ் வண்டிக்காகக் காத்திருந்தோம். எம்முடன் வந்த ஒருவர் கமராப் (Camera) பையைத் தவற விட்டுவிட்டேன் எனப் பதட்டத்துடன் கூறினார். எமது குழுவைப் படம் எடுப்பவரும் அவரே. அவரது கமராவின் பெறுமதி சுமார் $5000 எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம். ஏனெனில் மீண்டும் அவ்விடம் சென்றுவர குறைந்தது 2 - 2 1/2 மணி நேரம் ஆகும். எமது வழிகாட்டி, "சரி நீங்கள் இங்கேயே காத்திருங்கள். நான் இவரையும் அழைத்துச் சென்று பார்த்து வருகிறேன்" எனக் கூறிச் சென்று விட்டனர். நீண்ட நேரம் காத்திருந்தோம். பின்பு இருவரும் சிரித்தபடியே வந்தனர். கைகளில் பெரிய கனத்த பை Camera bag தொங்கிக் கொண்டிருந்தது. சரி இனி எமக்குள் எழுந்த கேள்விகளை கேள்வி களாகவே உங்களிடம் விடுகிறோம்.

யோசித்துப் பாருங்கள் அது ஒரு இலே சான பையல்ல. மேலும் அது உருப்பெருக்கி கள் (Zoom lenses) கொண்ட மிகவும் பெரிய கனமான கமெரா. மேலும் அவரின் தொழிலே அது. அதை அவர் எப்போதும் தன்னுடனேயே வைத்திருப்பார். எவ்வாறு அவர் அதை மறந்தார்? அதை மறக்கச் செய்தது எது? ஏன் அதை மறக்கச் செய்தது? புதிய நாட்டில் ஏன் ஓர் ஏழ்மையான நாட்டில் ஒரு பொருள் காணப் பட்டால் அதுவும் பெறுமதி வாய்ந்ததென்று கண்டதும் எடுத்ததும் அனேகமாக எல்லோரும் அதைத் தமது பொருள் எனக் கருதுவர் அது இயல்பு. மேலும் நாம் உணவருந்திய விடுதி ஒன்றும் முதல்தர அல்லது பொருட்களை உத்தரவாதம் செய்யும் ஓர் இடமுமல்ல. அப்படியானாலும் அவர்களால் எவ்வாறு அப்பொருளை மீண்டும் பெற்றுக்கொள்ள முடிந்தது?

எல்லோரும் பஸ் வண்டியினுள் ஏறியா யிற்று. எல்லோரும் அமைதியாயிருக்க ஸ்வாமி "உங்களிற்குக் கடந்த கடைசி வகுப்புகளில் உபதேசித்திருந்தேன். நீங்கள் இனி குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட இடத்தில் அமர்ந்து தியானம் செய்ய வேண்டிய அவசியமில்லை. ஆனால் செய்கின்ற ஒவ்வொன்றையும் ஒவ் வொரு செயலையும் விழிப்புணர்வுடன் செய் யுங்கள். அதுவே தியானமாகும் என மீண்டும் நினைவு படுத்துகிறேன். இனிமேலாவது செய்வது ஒவ்வொன்றையும் விழிப்புணர்வுடன் செய்யப் பழகுங்கள்" என்று கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னைத் தவமும் முக்தி நாதரும்

பயணம் தொடர்ந்தது. இனி பிரயாணம் செய்த வீதிகளைப் பற்றிக் குறிப்பிட வேண்டி உள்ளது. மிகவும் ஒடுக்கமான, சீரற்ற, இரண்டு வாகனங்கள் மிகவும் சிரமப்பட்டு விலத்தக் கூடியதாக அமைந்த கற்களும் முட்களுமே நிறைந்த சில இடங்களில் மட்டுமே 'வீதி' எனக் குறிக்கப்படுகின்றளவிற்கு ஒடுக்கமான தெருக் களாகும். சிலவேளை அங்கேயே பிறந்து வளர்ந்தவர்களிற்கு அது சாதாரண விடயமாக இருக்கலாம். ஆனால் மேற்குலக நாடுகளில் தெருக்களை நீண்ட காலமாகப் பார்த்துப் பழகிவிட்ட எமக்கு அது புதுமையாகவும் வித்தியாசமாகவுமே இருந்தது. சற்று நேரம் பிரயாணம் செய்திருப்போம். சாலை எங்கும் வாகனங்கள் தேங்கி நின்றன. நாமும் நின்றோம். நீண்ட நேரமாயிற்று AC வேலை செய்வதும் எப்போதோ நின்று போயிற்று. அதைத் திருத்த சாரதி எடுத்த முயற்சியும் வெற்றி தரவில்லை. உஷ்ணமும் புழுக்கமும் சொகுசாகப் பழக்கப்பட்டு விட்ட எமது உடம்புகளிற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. நீர்த் தாகம் அதிகரித்தது. மலசலகூடங்கள் இல்லை. சரி வெளிதானே போகலாம் என்றால் கூட்டம் இருந்தது. கொசுக்களும் விஷ ஜந்து களும் இருக்குமோ என்ற அச்சம் இருந்தது. அவற்றைமீறி ஆண்கள் இறங்கி விட்டார்கள். பெண்கள் எவ்வாறு இறங்குவது?

வழிகாட்டியும் ஏன் வாகனங்கள் தேங்கி நிற்கின்றன என அறியப் பகீரதப் பிரயத்தனப் பட்டார். கைத்தொலைபேசியில் மற்றவர்களை யும் நகர் காவலரிற்கும் மற்றவர்வரை விசாரித் தும் அறிய முற்பட்டார். எங்கோ தொலை தூரம் நடந்தும் அலைந்தும் மொழி புரியாக நாட்டிலே சில சிற்றுண்டி வகைகளையும் பானங்களையும் பெற்றுக் கொண்டோம்.

உடல்கள் மட்டுமல்லாது மனங்களும் புழுங்க ஆரம்பித்தன. விடையேதும் தெரிய வில்லை. மிகவும் நீண்ட நேரத்தின்பின் வழிகாட்டி வந்து, தொலை தூரத்தில் ஓர் விபத்து நடைபெற்று விட்டது. விபத்தில் ஒருவர் பலியாகி விட்டார். (பஸ் - மோட்டார் சைக்கிள்) இங்கு விபத்து நேர்ந்தால் பொலி சும் இறந்தவரின் உற்றார்களும் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவர். உற்றார்களைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டும், அவ்விடத்துக் குச் செல்ல வேண்டும், அவர்கள் சம்பவம் நடந்த இடத்திற்கு வரவேண்டும். அதன் பின்னரே உடல் அவ்விடத்திலிருந்து அகற்றப் படும். அதுவரை நாம் தாமதிப்பதைத் தவிர வேறு வழியே இல்லை. அதற்கு மூன்று நாட்களாகும்" எனக் கூறினார்.

நாம் அதிர்ந்து போனோம். மலசல வசதியில்லை, உணவில்லை, நீரில்லை இவற்றை எல்லாம் விட உஷ்ணமும் புழுக்க மும் அதிகமாக இருந்தது. அதைவிட கொசுக் கள் மற்றும் சிறுசிறு பூச்சித் தொல்லைகள்.

திடீரென ஒரு குரல் எழுந்தது; உடனடி யாக வேறு பஸ்ஸிற்கு ஏற்பாடு செய்யும். உமது மேலிடத்தை (ஏற்பாட்டாளரை) தொடர்பு கொள்ளும். உம்மால் முடிந்தவற்றைச் செய்து விடும். சரி நீங்கள் எல்லோரும் "அமைதியாக தியானம் செய்யுங்கள்" ஸ்வாமி கூறிவிட்டு தியானத்தில் ஆழ்ந்து விட்டார். நாமும் தியானம் செய்தோம். நீண்ட நேரமாகியது. சுமார் 40 நிமிடத்தின் பின் வழிகாட்டி வந்து, "வேறொர் பஸ்ஸிற்கு ஏற்பாடாகி விட்டது. அது வர இன்னும் சற்று தாமதமாகும். அதற்குள் நாம் நடந்துபோய் பிணம் இருக்கும் இடத்தை தாண்டிச் சென்று தேங்கி நிற்கும் வண்டிகளை யும் தாண்டி அங்கு போய்க் காத்திருப்போம்" என்று கூறினார். அவ்வாறே நாமும் இறங்கி சக்தியை எல்லாம் சேர்த்து நடந்தோம். ஏனெனில் எம்மில் அதிகமானோர் Diabetes (நீரழிவு) வியாதியினால் பீடிக்கப்பட்டவர்கள். குறித்த நேரத்திற்கு உணவு, நீர், மாத்திரை (Sugar இல்லாத பானங்கள்) இல்லாவிடில் எவ்வாறு அவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதை நாம் உங்களுக்குக் கூறத் தேவை யிராது என நினைக்கிறோம். தொடரும்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்திய
யாத்திரையின் போது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SCHOOL OF SELF - REALIZATION

# உன்னை அறியும் பயிற்சிப் பாசறை

**AT**
**42 CALVERLEY TRAIL**
**SCARBOROUGH, ON**
**TEL.: 416-282-0743**
**EVERY SUNDAY**
**TIME: 10.00 A.M - 12.30 P.M**
**CONDUCTED BY SWAMY PARAMATHMANANDA**

தொடர்புகளுக்கு: ஸ்வாமி பரமாத்மானந்தா

**ஸ்வாமி பரமாத்மானந்தா அவர்களால் வெளியிடப்பெற்ற நூல்களின் விபரம்**

வாழ்வை உயர்த்தும் உன்னத எண்ணங்கள்
பிரசுரம் - 2000
ஒளிமயம், பிரசுரம் - 2003
ஒளிரும் உண்மைகள் பாகம் - 1
பிரசுரம் - 2006
ஒளிரும் உண்மைகள் பாகம் - 2
பிரசுரம் - 2007
ஒளிரும் உண்மைகள் பாகம் - 3
தத்வ போதம் பிரசுரம் - 2007
அக வாழ்வின் உயர் நிலை (தமிழ்) -2008
The Way of Life (ஆங்கிலம்) - 2008
உயிரை நோக்கி (தமிழ்) - 2008
Steps to change (ஆங்கிலம்) - 2008
ஒளிமயம், பிரசுரம் - 2009
மாதாந்த சஞ்சிகை ஒளிமயம் (Brilliance)
இளைஞர்க்கான மாதாந்த வெளியீடு
(ஆங்கிலத்திலும் தமிழிலும்)

**CANADA YOGA VEDANTA ORGANIZATION**
(A NON-PROFIT CORPORATION APPROVED BY GOVERNMENT OF ONTARIO #1707010)

**President:**
Swami Paramatmananda

**Secretary & Treasurer:**
Mrs. Thavamani Balasubramaniam

**Brilliance Magazine:**
Mr. Hridyanand
Mr. Kiruba (Selva Graphics)

**Feedbacks:**
browse brilliancemagazine@gmail.com

**Brillance Magazine Published By:**
Brilliance Printers
(owned and operated by C.Y.V.O)

**Visit us online at: www.cyvo.org**

**BOOKS WRITTEN BY SWAMI PARAMATMANANDA**

1. Life Enhancing Thoughts (2000)
2. Brilliance (2003)
3. Illumine Truths - Part 1
   • Ishavashya Upanishad (2006)
4. Illumine Truths - Part II
   • A Dialogue with Death (2007)
5. Illumine Truths - Part III
   Thatvabodham (2007)
6. Agavalvin Uayar Nilai (2008)
7. The way of life (2008)
8. Uyerai Nokie (2008)
9. Steps to change (2008)
10. Olimayam (2009)
    & Karunaiyinal DVD / CD
11. Monthly Magazine (Brilliance)
    (Tamil & English)

ஸ்வாமி
பரமாத்மானந்தா
தலைவர்
கனடா
யோக
வேதாந்த
நிறுவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org